உ

கணபதி துணை.

வித்யாபாநு.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக."—திருக்குறள்.

தொகுதி.	நள-௵ மாசி-மீ	பகுதி.
9	1917 மார்ச்சு.	2

கல்விமுறையில் சீர்திருத்தம்.

நமது பாநுவின் முந்தின சஞ்சிகையில், நமது மாணவரது கல்வியின் ஒழுங்கைப்பற்றிய ஸ்வாமி விவேகானந்தரின் அபிப்பிராயத்தை ஒருவாறு குறித்துள்ளோம். அன்றியும், தற்காலம் நடந்து வரும் கல்விமுறையில் அவர்களுக்கு இருந்த வெறுப்பையும் தெரிவித்திருந்தோம்.

நமது முன்னவர்கள் அக்காலத்தில் பெற்றுக்கொண்டிருந்த கல்விமுறையையும், அதனால் அவர்களும் நம் நாடும் அடைந்திருந்த நன்மையையும், தற்காலக் கல்விமுறையால் சிலருக்குமாத்திரம் ஏகதேசப்பிரயோஜனம் தெரிவதன்றி ஏனையோர் பயன் சிறிதும் பெறாது பெரு நஷ்டத்தையும் அடைந்து வருகிறார் என்னும்

உண்மையையும் நமது நேயர்கள் நன்கு ஆராய்ந்து உணரவேண்டியது. தற்காலக் கல்விமுறையால் சிறிது பிரயோஜனத்தைப்பெற்று, அதனால் பெருநஷ்டத்துக்கு ஆளாகிறவர்கள் யார்? அவர்கள் எதன் நிமித்தம் இந்த வீண் முயற்சியில் நுழைந்து வருந்துகிறார்கள் என்பதைச் சிறிது கவனிப்போம்.

தமது தேசாசார குலாசாரங்களாகிய ஆர்யாசாரங்களை முற்றும் இழந்தேனும், தமது பிதிரார்ஜித சொத்துக்களை இழந்தேனும் தங்களது சுகவாசஸ்தலமாகிய கிராமங்களைவிட்டுப்பெரிய பட்டணங்களில் குடியேறி, தங்களது புத்திரர்களை ஆங்கில முறையில் கல்வி பயிற்றி நடை உடை ஊண்முதலிய ஆசாரங்களை ஆங்கிலமுறைக்கே திருப்பி, எவ்வனமேனும் அரசாளும் வகுப்பினரோடு உறவு பெறுவதே தமது கடைப்பிடியாகக் கொண்டுள்ள சிலரே அவராவர். அவர்கள் தாங்கள் கெடுவதன்றித் தமது உறவினர்களையும் வம்சத்தினரையும் சிறுகச் சிறுகத்தம் நாட்டினரையும் கெடுக்கப் பிரயத்தனப்படுபவராக ஆகின்றார்கள். இவர்களே முதன்மையாக நமது பூர்விகக் கல்வி முறையை யழித்தவர்கள் என்று எண்ணுவதற்கும் இடமுண்டாகிறது. ஆனால், இந்தமுறையை யழித்ததனால் இவர்கட்குப்பயன் யாதுமில்லையோவென்றால்:—உண்டு; நாம் முன்னே சொல்லியுள்ளபடி, அரசாளும் வகுப்பினரோடு கலந்துத்தாமும் அம்முறையிலேறி, தற்கால லௌகிகப் பயன்களுள் சிறிது பெற்று இறுமாப்படைவதேயாகும். இந்தமுறை தொற்று வியாதிபோல் பலரையும் பற்றிவிட்டதனால், பல பெற்றோர்கள், தமது புத்திரர்களின் ஆங்கிலக்கல்வியின் நிமித்தம், தங்களது ஆஸ்திகளை இழந்து பாடுபடுகின்றனர். யாதும் நீண்ட பிரயோஜனத்தைத் தராமலே இந்த ஆங்கிலப்படிப்புமுறை, சில வருஷங்களாக நமது நாட்டில் குடியேறி, நமது பூர்விக ஆசாரங்களைத்தனது வாயிலிட்டுக் கொண்டு, இப்போது முற்றும் விழுங்கவும் எதிர்பார்க்கிறது.

இந்த முறையில் புகுந்து இறுமாந்திருக்கும் சில ஸ்வகாரிய துரந்தரர்களை நீக்கிவிட்டு இம்முறையில் நுழைந்த மற்றவர்களைக் கீழ்வரும் சில கேள்விகளைக்கேட்டுப்பார்ப்போம்.

1. ஆங்கிலப்படிப்புமுறையினால் ஆஸ்திகஅறிவு முதிர்கிறதா?

2. அன்றி, நமது பழைய முறையைவிட, இம்முறைமாணவர்களது குணத்தையுயர்த்துகின்றதா?

3. அன்றி, பூர்விக முறையில் அடங்கியிருந்த உயர்ந்த கொள்கைகளைவிட மேலான கொள்கைகளை நமக்கு கற்பிக்கின்றதா?

இக்கேள்விகள் மூன்றனுக்கும் அவர்கள் "இல்லை" யென்னும் விடையையே தருவார்கள் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. ஆயின், ஏன் இதனுள் நுழைகிறீர்கள் என்றால், "இம்முறை அரசாங்கத்தாரால் ஏற்றுக்கொள்ளப்பெற்றது. உண்டியும் உடையும் கிடைக்க அநுகூலமாயிருக்கின்றது" என்றே குறிக்கின்றனர்.

ஆகையினால் இம்முறையைத்திருத்தி நமது பூர்விகமுறையைப் புகுத்த வேண்டுமென்பதே நமது வேண்டுகோள். இதுவே கற்றறிந்த பல பெரியோரது தேர்ந்த கொள்கையுமாகும். "ஆனால், இந்த முறையினால் நாட்டுக்கு யாதொரு பயனுமில்லையா?" என்னும் கேள்வியொன்று பிறக்கலாம். அதனைப்பற்றி யாலோசிக்குங்கால், இந்த முறைப்படி படிப்பேறிய பலரில் விடாது முயன்றேறிய சிலரே, அரசாங்கத்தில் உத்தியோகம் பெற்று வாழ்கிறார்கள்; எனினும்; அவர்களால் நாட்டுக்கு ஆகவேண்டிய நன்மைகள் எதிர்பார்த்தபடி அடைவிக்கப்படுவதில்லை. இந்த விஷயத்தை எழுதும்போது எமக்கு ஒன்று நினைவுக்கு வருகிறது அது பின் வரும்.

ஒருகால், நாம் எமது நண்பரான சித்திரிகர் ஒருவர் வீட்டுக்குச் சென்றிருந்தபோது, அங்கு அவரால் எழுதப்பட்டு வைத்திருந்த சித்திரங்கள் பலவற்றுள்ளும் ஒன்றினைக்கண்டு மிகவும் வியக்கவேண்டியிருந்தது. அஃது என்னவெனில்:—கூறுவோம்.

> காபி அரைக்கும் யந்திரம்போன்றதோர் பெரிய யந்திரம். அதற்கு ஒரே ஒரு பெரிய சக்கரம் உளது. காபிமுதலானவற்றைப் போடுவதற்கான ஒரு பெரிய வாயுள்ளது. அந்தவாய் மிகவும் உயரத்தில் இருக்கின்றது. அந்தவாயில் கொண்டுபோயக் கொட்டக்கூடியபடி கீழிருந்து பெரிய ஏணிமரம் ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது. இந்தியாவில் உள்ள பல ஜாதியார்களும் தங்கள் தங்களது குழந்தைகளை யெடுத்துக்கொண்டு;

அந்த ஏணிமரத்தின்மேல் ஏறி, அந்தப் பெரிய வாயினுள் போட்டுவிடுகின்றனர். பிறகு, அறைபட்டு மாவாக விழும் வாயின் கீழே அநேக விதமான பாத்திரங்கள், நிமிர்த்தும் கவிழ்த்தும் வைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றுள் ஒவ்வொன்றுக்கும் வியாபாரம், கைத்தொழில், சாஸ்திரம், தத்வம், சித்திரம், யுத்தம், கப்பலோட்டல், சர்க்கார் உத்தியோகம், வக்கீல், உபாத்திமைத்தொழில் என்ற நாமங்கள் இடப்பட்டிருக்கின்றன. அவைகளுள் சர்க்கார் உத்தியோகம், உபாத்திமைத்தொழில், வக்கீல் என்ற நாமமிட்ட பாத்திரங்களே மாவாலானவைகளால் நிரப்பப்பட்டு நிமிர்த்திவைக்கப்பட்டும், மற்றவை கவிழ்க்கப்பட்டும் இருக்கின்றன. அந்தச் சித்திரத்தின் கீழ் இங்கிலீஷ்கல்வி முறையந்திரம் என்று எழுதியிருக்கிறது. அந்த யந்திரத்தின் சமீபத்தில் நின்று ஒரு இந்திய மனிதனும் ஒரு ஐரோப்பிய மனிதனும் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். இந்தியர் கன்னத்தில் ஒரு கையை வைத்துக்கொண்டு துக்க முகத்துடன் நிற்கிறார். ஐரோப்பியர் பரிஹஸித்துச் சிரித்துக் கொண்டிருக்கிறார்."

இதனைக்கண்டவுடன் எமக்குத் துக்கமும் ஆச்சரியமும் அடங்காமல் வந்தன. நமது நாடு முன்னேற வழியில்லாமையைப்பற்றிய துக்கமும், இவ்வளவு அதிசயமான சித்திரம் முதலியவற்றைச் செய்யும் சமர்த்துள்ள இந்தியரை நாம் பெற்றிருக்கின்றமையைப் பற்றிய ஆச்சரியமுமாகும்.

இதனால், மாணவருக்கு ஆங்கிலம் போதிப்பதில் எமக்கு அதிருப்தி இருப்பதாக நேயர்கள் கொள்ளமாட்டார்களென்று எண்ணுகிறேன். ஆங்கிலம் அவசியம் கற்றுக் கொடுக்கப்பட வேண்டியது. அது நமது ராஜபாஷை அன்றியும் ஒவ்வொருவருக்கும் தமது பாஷைத் திறமையுடன் பிறபாஷைகளில் ஒன்றிலேனும் தேர்ச்சி பெற்றிருந்தால் தான், இதர தேசவொழுக்க முறை முதலியவற்றைத் தெரிந்துகொண்டு, தமது தேசகாலங்களுக்கு ஏற்றத்துக்குத்தக்கபடி அவசியமான சில விஷயங்களை மாற்றிக் கொள்ளலாகும். அவற்றுளேயும் ராஜபாஷையை அவசியம் அறிய வேண்டியதே. ஆயின் நமது கொள்கையானது ஆங்கிலமுறை நமது மாணவர்க்கு நமது தேசத்து முன்னேற்றத்தை உத்தேசித்துக் கூடாதென்பதுவே. ஏனெனில், அம்முறையினால் நமது

மாணவர் நடை உடை பாவனைகளில் மாறிவிடுகிறார்கள். மாணவர்கள் மாறுவதென்பது தேசம் மாறுவது என்று அர்த்தமல்லவா?

ஆகையினால், ஆங்கிலப் படிப்பையும் உபபாடமாக வைத்துக்கொண்டு, முக்கியமாக நம் தேசபாஷையிலேயே மற்றவையெல்லாம் கற்றுக்கொடுக்கப் படவேண்டும். கல்விமுறையின் முக்கியநோக்கம், நமது மாணவர்க்கு நமது தேசாசாரம், குலாசாரம், நமது வேதக்கொள்கை, நமது வைத்யக்கொள்கை, நமது தேசசரித்திரம், நமது தேச மன்னரின் சரித்திரம், நீதிசாஸ்திரங்கள், அவற்றுக்கு நமது புராணக் கதைகளிலிருந்தே உதாரணங்கள், தொழிற்கல்வி பலசாஸ்திரக் கல்வியாகிய இவை போன்றவைகளாக இருக்கவேண்டும். அந்தநோக்கத்துக்கு வேண்டிய ஸாதனங்கள் சில நமது தேசபாஷையில் கிரந்தரூபமாக ஏற்பட்டிராவிடின், இந்த தேச பாஷைகளிற் சிறந்த பாண்டித்யமுடையவராகித் தேசபாஷையிலும் தேச முன்னேற்றத்திலும் அபிமானமுமுடைய நம்மவரிற் சிலரைக் கொண்டு அவரவர்க்குக் கைவந்த சாஸ்திரங்களில் தெளிவும் நயமும் உள்ள நடையுடன் கூடிய கிரந்தங்களை இயற்றச்செய்து, மாணவர்க்குப் புகட்டவேண்டும். அதிகாரமுறைக்கு வேண்டிய பயிற்சிகளுக்காக ஆங்கிலத்தையும் தகுந்தபடி கற்பிக்கவேண்டும். ஆனால் நீதி தெய்வக்கொள்கை முதலிய உயர்ந்த கொள்கைகட்கு உதாரணங்களெல்லாம் நமது நூல்களிலிருந்து நம்முன்னோரது ஒழுக்கங்கள் காட்டப்பெறல் வேண்டும். இந்த முறையைப் பின்பற்றி நடந்து வந்ததனாலேயே ஐப்பான்தேசம் நாகரிகத்தில் முன்னேறி இதரதேசங்களுடன் இப்போது ஸமானமாகத் தோள் கொட்டிக்கொண்டு நிற்கிறது. அங்ஙனமன்றி இப்போதிருக்கும் ஆங்கிலமுறையையே, எத்தனையாண்டு பழகிவந்தாலும், நாடுநாடாவதற்கு மார்க்கமிராது. ஏனெனில்:—நமது முன்னோர்களது சரித்திரம் கற்றுக்கொடுக்கப் பெறாத தன்மையினால் நமது நாட்டுக்கொள்கைகளும் மனோபலமும் அழிந்துவிடுகின்றன. அந்யபாஷையிலேயே மிக்கப் பழக்கம் கொண்டுவிடுவதனால், நமது நாட்டுக்குடிகளுடன் பழகுவதற்கு இயலாமலும், அதனால் அவர்களது சுகதுக்கங்கள் கவனிக்

கப் படாமலும் அழிகின்றன. நாட்டுக்குடிகள் தமது மேட்டுக்குடிகளால் கவனிக்கப்படாமல் போகவே, அவ்வேழைகள் தமது விவசாயம் தொழில் இவற்றைக் கைவிட்டு அடிமைகளாக மாறிவிடுகின்றனர். தேஹபலமுள்ள வரையில் அடிமைகளாக இருந்து பிறகு கிழப் பருவத்தில் பிச்சைக்காரர்களாகக் கிளம்பி விடுகிறார்கள். இந்தச் சிறுபழக்கம் சில பாலியர்களையும் பற்ற, அவர்களும் பிச்சைக்காரர்களாகக் கிளம்பி, சோம்பேறிகளாக மாறிவிடுகிறார்கள். பிறகு இது அவர்கட்கு ஜாதித் தொழிலாகவும் ஆகிவிடுகிறது. ஆகலின், மேட்டுக்குடிகள் தம் நாட்டுக்குடிகள் விஷயத்தில் கவனம் செலுத்தாவிடின் நம் நாடு அடிமை நாடாகவே எப்போதும் இருந்துவிடும் என்பதற்குத் தடையென்னை?

ஆகையினால், ஆங்கிலம் படித்து அறிவிற்சிறந்த பெரியோர்களே! நாட்டின் நன்மையைக் கோரும் நன்மனத்தோரே!! கல்வி முறையைக் கருதுகின்ற கனதனவான்களே!!! நந்தமிழ் பாஷையின் உயர்வில் உறுதி கொண்டுள்ள நாட்டுக்கோட்டை வைசியமணிகளே! உங்கள் உங்களது தேஹம் மனம் பொருள் இவற்றினது செலவின் வழியை நம் நாட்டுக்கல்வி முறையிலேயே செலுத்த முன்வாருங்கள். கல்வி முறையாலன்றி மற்று எந்த முறையாலும் ஒரு நாடு செழித்தோங்காது. தாழ்ந்த குடிகட்குத் தக்கமதிப்பு விவசாயத்திலும் தொழில்களிலும் உண்டானால் அல்லாமல்; நாடு அடிமைத் தனத்தினின்றும் நீங்காது. நமது தேசத்திலேயே விளைந்து நமது தேசத்திலேயே வளர்ந்து நமது தேசத்திலேயே அழிந்தாலல்லாமல், நமது தேசப்பொருள்களால் நமது தேசப்பொக்கிஷம் நிறைந்திராது. இதரதேசப் பொருள்களால் நமது தேசம் வாழ்வில் உயரும் என்பது, நினைக்கவும் கூடாதகாரியம். இதரதேசப்பொருள்களையே நம்பியிருந்த நாம் இப்போது இந்த மஹாயுத்தம் காரணமாகப் படும் கஷ்டங்களை அறிந்துகொள்ளக்கூடாத இந்தியனும் உண்டா? நமது விளைபொருள்கள் இதரதேசங்கட்குச்சென்று திரும்பிவாராமல், அவைகள் இங்கேயே நமக்கு வேண்டிய பொருள்களாக மாற்றப் பட்டாலன்றோ, நமது குடிகட்குக் கொள்வதிலும் கொடுப்பதிலும் ஊதி

பம் தோன்றும். அன்றுதானே நாடு பசியாமல் இருக்கும். ஆகலின், நம் நாட்டு நோக்கத்துக்கு முந்துங்கள். கல்விமுறையை மாற்றுங்கள். நமது பெண்களையும் நம்கல்விமுறையிலேயே பழக்குங்கள். இதுவே சமயம். இதுவே நற்காலம். இந்த அரசரோநாம் கோரிய வண்ணம் கொடுக்கும் அரசர். இவர்களாலேயே நாம் நல்வாழ்வு பெற்று நாட்டில் செழித்திருக்கலாகும். ஆகையினால் தன்மறுப்பும் தேசாபிமானமும் பாஷாபிமானமும் குலாபிமானமும் வேதாபிமானமும் தேவாபிமானமும் கொள்ளுங்கள். பாரதமாதா அருள் செய்யக் காத்திருக்கிறாள். பாரத புத்திரர்களில் அநேகரும் தன்மறுப்புக் காட்டி உழைத்து வருகிறார்கள். அவர்கள் கைதூக்கிவிடுகிறார்கள். உங்களது முயற்சியையும் எதிர்பார்க்கிறார்கள். ஆகலின் முந்துங்கள். இறைவன் அருள்புரிக.

பத்திராதிபர்.

தந்தை சொன்மிக்க மந்திரமில்லை.

இதன் பொருள்— பிதாவினுடைய சொல்லைப் பார்க்கினுஞ் சிறந்தபயனைத் தரத்தக்க மந்திரம் ஒருவனுக்கு எந்த நூலினும் இல்லை என்பதாம். இதனால் மந்திரமானது தன்னை ஜபித்தவருக்குத்தக்க பயனைத்தரும் என்பதும், அம்மந்திரத்தினுஞ் சிறந்த பயனைப் பிதிருவாக்கிய பரிபாலனம் தருமென்பதுங் கொள்ளக்கிடக்கிறது. மந்திரங்களிருத்தற்கு நிலைகளாம் நூல்களே யாதலினாலும், அந்நூல்களும் எண்ணிறந்தவாகலானும், எந்த நூலினும் இல்லையெனவருவித்துக் கூறப்பட்டது. மந்திரங்கள் ஒவ்வொன்றற்கும் ஒவ்வொரு சக்தியே யிருத்தல்கூடும். ஒன்றற்குரிய மந்திரம் மற்றொன்றற்கு உரித்தாகாது. தந்தை சொல்லாகிய மந்திரமோவெனில், எல்லா நலன்களையும் ஒருங்கே தரவல்லதாகும். தன்னைப் பெற்றவன் தந்தையெனப்படுவன். இத்தந்தை தன் மகனுக்கு எவ்வாற்றானும் நன்மையே பொருந்தவேண்டும் தீமையொழியவேண்டும் என்னுங்கருத்துடையனாயிருப்பன். ஆதலால் அத்தந்தை கூறுஞ் சொற்களும் பிள்ளைக்கு ஹிதம் பயப்பனவேயாகும். மந்திரங்கட்கு ஒன்றை ஆக்குதற்கும் அழித்தற்கும் வல்லமையிருக்கின்றவாறுபோலச் சொற்களுக்கும் ஆக்கவும் அழிக்கவும் வல்லமையுண்டு. இதனை,

"நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்" என்னுந் திருக்குற ளுக்கு உரைசெய்யுமிடத்து "நிறைமொழி" என்பதற்கு "அருளிக் கூறினும் வெகுண்டு கூறினும் அவ்வப்பயனைப் பயந்தேவிடும் மொழி' எனப்பரிமேலழகியார் கூறியிருத்தலால் உணர்க. இதனால் சொல்ல யந்திரமாமாறு பெறப்பட்டது. தாம்படைத்த பொருளைக் கேடுறு வண்ணம் தக்கபடி பாதுகாத்தலும், அதனிடத்து மிக்க அபி மானத்தைச் செலுத்துதலும் உலகியற்கை. அப்பொருளினும் பார்க்கப் போற்றப்படுவர் புதல்வர். ஆதலான்றே திருவள்ளுவரும் "தம்பொரு ளென்ப தம்மக்கள்" என்றார். பெருநிதிபடைத்தோ ரும் புத்திரபாக்கியத்தையடைந்தாலன்றி மகிழ்வதில்லை "பிள்ளை யில்லாத பாக்கியம் நான் பெற்றிருந்தென்ன சிலாக்கியம்" எனவும்,

"படைப்புப் பலபடைத்துப் பலரோ டுண்ணும்
உடைப்பெருஞ் செல்வ ராயினு மிடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டுந் தொட்டுங் கௌவியுந் துழந்தும்
நெய்யுடை யடிசில் மெய்ப்பட விதிர்த்து
மயக்குறு மக்களை யில்லோர்க்குப்
பயக்குறை யில்லைத்தாம் வாழு நாளே" எனவும்,

"மக்களின் — ஒண்மையவாய்ச் சான்ற பொருளில்லை" எனவும் கூறப்பட்டிருக்கின்றமையாற் புதல்வரே எல்லாப் பொருளினுஞ் சிறந்த பொருள் எனக்கருதப்படுவர். அப்புதல்வர்க்குத் தந்தை யாராலாராய்ந்து கூறப்படுஞ் சொற்கள் உறுதி பயப்பனவே யாமென்பதொருதலை. லோகபிதாவாகிய கடவுளின் சொற்களென்று கருதப்படுகின்ற வேதாகமங்கள் சொல்லுவனவற்றை நாம் அங்கீ கரித்து அவற்றின் படியே நடந்தால் நன்கு மதிப்பிற்கும் திரு வருளுக்கும் ஆளாகலாம். நடவாவிடில் உலகநிந்தைக்கும் கடவு ளின் கோபத்திற்கும் பாத்திரமாகவேண்டும். ஆதலால் கடவுள் நம்மை உய்வித்தற்பொருட்டு அருளியவற்றை அலக்ஷியமாகக்கருது தல் கூடாது. அவ்வாறே தந்தையார் கூறுவனவற்றையும் அங்கீ கரிக்கவேண்டியதவசியத்திலும் அவசியமாகும். (தொடரும்.)

மணிவாசகன்.

இளங்கோவடிகள்.

உலகம்யாவையும் படைத்து, அளித்து, அழிக்கும் பரமகாருண்ய நிதியான பகவானுடைய சிறந்த அவதாரஸ்தலங்களையும், திருவிளையாடல்களையும் தாங்கினமையால் புண்ணிய பூமியாகிய இப் பரதகண்டத்தின்கண் உள்ள புராதன இராஜ்யங்களில் சேர, சோழ, பாண்டிய நாடுகள் தென் இந்தியாவில் விளங்கிய முக்கிய தேசங்களாகும். இம்மூன்று மண்டலங்களையும் அரசாண்டவர்கள் சேரர், சோழர், பாண்டியர் எனப்படுவர். இம்மூவரில் ஆதியில் வைத்து எண்ணப்பட்ட சேரரே மற்றைய இருவரிலும் முன்னாளில் பெருமை பெற்று, இற்றைக்கு 2150 வருஷங்களுக்கு முன் விளங்கிய மௌரிய சக்கிரவர்த்தியும், இந்திய சரித்திரங்களில் முதல்வனும் ஆகிய அசோகன் காலத்தில் கேரள புத்திரர் என்றழைக்கப்பெற்று, தென்னாட்டில் பிரபலம் பெற்று விளங்கினர். இவர்களின் பழமையை உட்கொண்டே "பண்டைக் காலந்தொட்டு மேம்பட்டு வரும் குடிகள் இம்மூவேந்தரும்" என்று பரிமேலழகரும் கூறியிருக்கிறார். இச்சேரவம்சத்தரசரைச் சிறப்பிக்கும் சங்க நூல்கள் புறநானூறு, பதிற்றுப்பத்து, அகநானூறு முதலியனவாம். இச்சேரவம்சம் ஓங்கிய காலத்தில் உதித்த ஜீவரத்நமும், ஐந்து பெருங்காவியங்களுள் ஒன்றாய், வைசியகுலத்தினரின் ஆதிகாவியமும் ஆகிய சிலப்பதிகார ஆசிரியரும், தாம் இன்பமுறாமல் உலகம் இன்பமுறச் செய்த மஹானுமாகிய இளங்கோவடிகளின் சரித்திரம் தமிழபிமானிகட்குப் பெருவிருந்தாகும்.

2 நாடு, நகரம், பிதா, பிதாமகன் முதலியவர்—சேரநாடு என்பது கருவூர்தாலுகா (திருச்சிராப்பள்ளி) கோயமுத்தூர் சேலம்

நீலகிரி ஜில்லாக்களும், மைசூர் ராஜ்யத்தின் தென்பகுதியும், மேற்குத் தொடர்ச்சி மலைநெடுக உள்ள கடற்கரைப் பக்கங்களுமாகும். இச்சேரமண்டலத்தின தலைநகரம் வஞ்சிமா நகரமாகும். இவ்வஞ்சிக்குக் கருவூர் என்பதும் ஒரு பழம்பெயர். "நெடுந்தேர்க் கோதை—திருமாவியனகர்க் கருவூர் முன்துறை" என்ற அகப்பாட்டால் அறியலாம். இவ்வஞ்சிநகரம், திருவஞ்சைக்களம் அன்று; திருச்சிராப்பள்ளியைச் சேர்ந்த "கருவூரே" என்று ஸ்ரீமான். மு இராகவையங்கார் அவர்கள் "சேரன்—செங்குட்டுவன்" என்ற நூலில் யாவரும் ஒப்புக்கொள்ளத்தக்க சிறந்த ஆதாரங்களுடன் காட்டியிருக்கிறார்கள். இந்நகரத்தை வளஞ்செய்யும் நதி "ஆன்பொருநை" என்பது, "வஞ்சிப்புறமதில் அலைக்கும் கல்லென் பொருநை" என்னும் புறப்பாட்டடியால் விளங்கும். இந்நதியின் பெயர் இப்பொழுது ஆம்பிராவதி என வழங்குகின்றது. இம்மூதூரின் மத்தியில செம்பொன் மயமான சிறுமேருவைப் போல இவ்வரசர்களின் அரண்மனை பிரகாசித்தது. இதனுள் கொலுவிருக்கை மண்டபமும், மந்திராலோசனை மண்டபமும், நடனசாலைகளும் பிறவும சிறந்து விளங்கின. இவ்வரண்மனைக்கு "இலவந்திகை வெள்ளிமாடம் என்ற சிறப்புப் பெயரும் உண்டு. இக்காலத்தில் சேர ராஜ்யத்தைச் செங்கோல் செலுத்திய அரசன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் என்பவன்; "வடவருட்கும்வான்தோய் நல்லிசைக், குடவர் கோமான் நெடுஞ்சேரலாதனை" என்று கூறியுள்ளார். இச்சேரலாதன் தன்னுயிர் போல் மன்னுயிர் காப்பவன்; குடிகளுக்கு ஏற்படும் ஐந்து பயம் தீர்த்து அரசாள்பவன்; இமயம் வரை படையெடுத்துச் சென்று அம்மலைமேல் விற்கொடி பொறித்த செம்மல்; தமிழகம் முழுவதையும் ஒருகுடைக்கீழ் வைத்தாண்ட அண்ணல்; தன்னுடன் பொருதற்கு வந்த ஆரிய அரசரை வணங்கச் செய்த வீரன்; யவன அரசரைச்சிறைபிடித்து அக்கால வழக்கின்படி நெய்யை அவர் தலையில் சுடச்சுடப் பெய்து, அவர் கைகளைப் பின் கட்டாகக் கட்டி, விலையுயர்ந்த வயிரங்களையும், ஆபரணங்களையும் கப்பமாகப் பெற்று, வஞ்சிநகரத்தினர்க்கு உவந்து உதவிய

வள்ளல்; குமட்டூர்க் கண்ணனார் என்ற சங்கப் புலவரால் பாடப் பெற்ற புகழோன்; பதிற்றுப்பத்தின் 2—ம் பத்தின் நாயகன், உதியஞ் சேரல் என்ற சேர அரசனுக்கு வெளியன் வேண்மான் மகள் நல்லினி வயிற்றுப் பிறந்த தோன்றல்.

3 மாதா சகோதரர் வரலாறு.—இச் சேரர் பெருந்தகையாகிய இமயவரம்பனுக்கு மனைவியர் இருவர். அவருள் 1. சோழன் மணக் கிள்ளி மகள்—நற்சோணை 2. வேளாவிக் கோமான் பதுமன் மகள் பதுமன்தேவி. இவ்விருவரில் முதல் மனைவியும் பட்டமஹிஷியுமாகிய நற்சோணையிடத்து உதித்த புதல்வர் இருவர். அவருள் 1. செங் குட்டுவன் 2. இளங்கோ அடிகள். இரண்டாவது மனைவியாகிய பதுமன் தேவியிடத்தில் உதித்த மக்கள் இருவர். அவருள் 1. களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரல் 2. ஆடுகோட்பாட்டுச் சேர லாதன். ஆகவே நெடுஞ்சேரலாதன் புத்திரர் நால்வரில் இளங்கோ வடிகள் கோப்பெருந்தேவி வயிற்றுதித்த இளவரசர். இக்காரணத் தால் இவர்க்கு இளங்கோ எனப்பெயர். இவர் சகோதரர்கள் மூவ ரையும் பற்றிய விவரமான வரலாற்றைப் பதிற்றுப்பத்து 4, 5, 6, ம் பத்துப்பதிகங்களால் நன்கு அறியலாம். மன்னர் மன்னனாகிய செங் குட்டுவனைப் பற்றிய முழுவரலாற்றையும் சேரன்—செங்குட்டுவன் என்னும் நூலிற்பரக்கக் காணலாம். இனி இளங்கோவின் அருமை பெருமைகளை ஆராய்வோம்.

4. கல்விப் பயிற்சி:-நெடுஞ்சேரலாதன், மக்கள் நால்வரையும் தான் அடையக் கூடிய நான்கு புருஷார்த்தமென எண்ணிப்பேணி, தக்க பருவத்தில் வில்வித்தை, ஆயுதப் பயிற்சி, யானையேற்றம், குதிரை யேற்றம், முதலிய அரசவித்தைகளையும், சுக்கிர நீதி, சாணக்கிய நீதி, கௌடில்லியம் முதலிய அரசநீதி நூல்களையும் பாஷையாகிய ஆதிதொன்மையினிய தமிழ்ப்பாஷையில் உள்ள தக்க நூல்கள் தொல்காப்பியம் முதலிய இலக்கிய இலக்கணங்களையும், இசை நூல்கள் நாடகநூல்கள் முதலியவற்றையும் தக்க ஆசிரியரை நியமித்துக் கற்பித்து வந்தார். பிறவிச் செல்வமுடைய பிள்ளைகளும்

ராஜ்யாதிகாரச் செல்வத்தைச் சிறப்பித்தும் கல்விச் செல்வத்தின் பலதுறைகளிலும் திறமை படைத்து, உருவிலும் திருவிலும் கலையிலும் வலியிலும் ஒத்ததன்மையராய் ஒத்தருணத்தினராய், இவர்க்கு நிகர் எவரும் இலர் என்று கூறப்பெறுமை பெற்றுச் சிறந்து விளங்கினர். (தொடரும்)

V. T. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்,
தலைமை தமிழ்ப்பண்டிதர்.
மஹாராஜா கலாசாலை,
புதுக்கோட்டை.

சிவகைங்கரிய நிகழ்ச்சியும் சிவாலய கும்பாபிஷேக மகிழ்ச்சியும்.

இப்புண்ணிய பூமியாகிய பரதகண்டத்திற் சிறந்து விளங்கும் இப்பாண்டிவளநாட்டின்கண்ணே, மூர்த்தி ஸ்தலம் தீர்த்தமென்னும் மூன்றானும் உயர்ச்சிவாய்ந்த புராதன க்ஷேத்திரங்களுள் ஒன்றாகிய "வீரவனம், அளகை" யாதிபலநாமங்கள் பெற்ற சாக்கைப்பதியில், ஸ்ரீ உமாம்பிகா ஸமேத ஸ்ரீ வீரசேகரப்பெருமான் தம் பரிவாரங்களுடன், வீற்றிருந்தருள்கின்ற திருவாலயமானது, சோழபாண்டிய மகாராஜாக்களாலும், சிவகங்கை ஜமீன்தார்களாலும், தேவகோட்டை புதுவயல் வீரசேகரபுரம் முதலிய பல நகரவைசியர்களாலும், மாத்தூர் கோவில் நகரத்தார் பிரிவு நகரத்தார்களாலும் இன்னும ஏனைய அபிமானிகளாலும் செய்யப்பெற்ற பிரதிஷ்டைகளும், அர்த்தமண்டபம் மகாமண்டபம் முதலிய மண்டபங்களும். இராஜகோபுரமாதிகோபுரங்களும், தீபங்களும், கட்டளைகளும், வெள்ளிமயவாகனங்களும், ஸ்வர்ணமய அங்கிகளும். இரத்தினாபரணங்களும், உற்சவங்களும், உடையதாயும்; மற்றும் அன்னசத்திரம் வேதபாடசாலை சாஸ்திர வித்தியாசாலை குருபூஜைமடம் பசுமடம் வேதாந்தமடம் முதலிய கட்டிடங்களால் சூழப்பெற்றதாயும், விளங்குகின்றதென்பதை யாவர் பலரும் அறிவர். முக்கியமாகப் புதுவயல் நகரவைசியா ஒவ்வொருவரும் தத்தமக்கேற்றவாறு இவ்வாலயத்தில் தர்மஸ்தாபனங்கள் செய்துவரும் பெரும்பாக்கியத்தைப் பெற்றவர்களாகவே இருந்துவருகின்றார்கள். இத்தலத்திலுள்ள சிவாலயத்துக்கும், அதன் வாயுதிசையிலுள்ள ஸ்ரீ உய்யவந்த

நாயகியின் ஆலயத்துக்கும் அவசியமான திருப்பணிகளைச் செய்து அஷ்டபந்தன, மகாகும்பாபிஷேகம் செய்ய எம்பெருமானது திருவருளை முன்னிட்டுக் கருதிய சுமார் 300 புள்ளிகள் நிறைந்த புதுவயல் நகரவைசியர்கள் நிர்ப்பந்தமின்றித் தத்தம் அபிப்பிராயப்படி கருத்தக்க தொகைகளை மாத்திரமே வாங்குவதென்ற நோக்கத்துடன், சுமார் ரூ. 22,000 சேகரித்து மேற்படி ஆலயங்களிலுள்ள பழுதுகளைச் செப்பனிட்டுத் தட்டோடுபோடத் தொடங்கி, அதில் அரைப்பாகமும், இரண்டு மூன்று கோபுரங்கட்குச் சுதைவேலைகளும் நடந்துகொண்டிருக்கும் பொழுது, கும்பாபிஷேக சுபதினம் ஸமீபித்துவிட்டபடியால், அத்திருப்பணியைப்பற்றி ஆலோசிக்கவேண்டுமென்ற எண்ணத்துடன், நகரத்தாரனைவரும் காளி ந நளவருஷம் ஐப்பசி மாதத்தில் ஓர்கூட்டம் கூடினார்கள். அதில் தற்காலம்வரை நடந்துகொண்டிருக்கின்ற திருப்பணிகட்குச் செலவான தொகை போக மீதியிருக்கும் ரூ 15000 த்துச்செலவானத்தில் பாக்கிப் பணிகளும் பூர்த்தியாகி கும்பாபிஷேகமும் செய்விக்கத் தொகைபோதாதாகலின், அதனை விரிவாகச்செய்ய மேலும் ரூபாய் சேகரிக்கவேண்டுமென்று பேசப்பட்டது. இவ்வணம் கும்பாபிஷேகம் விமரிசையாகச்செய்யப்படவேண்டின். பின்னும் பொருள்சேகரிக்கவேண்டுவது ஆவசியகமேயென எல்லோராலும் ஒற்றுமையுடன் அங்கீகரிக்கப்படவே, அவ்வாறு பொருள்சேகரிக்கும் முறையில், ஸமீபத்தில் நகரசௌக்கியங்கட்காக ஓர் பளுவான வரி வசூலிக்கப்பட்டிருப்பதால், இதற்கும் விப்பர்த வரிமேற்படுத்தி ஸாதாரண ஜனங்களுக்குக் கஷ்டம் நேரும்படிசெய்யாமல், முன் இப்பணிக்குச்சேகரித்ததுபோலவே, அபிப்பிராயவரியேற்படுத்துவதுதான் உசிதமானதுமென்று ஒரு சாரார் வற்புறுத்திப்பேசினார்கள். ஈசுவர காரியமாயிருத்தலினாலே, யாரும எந்தவரியையும் நிராகரிக்கப் போவதில்லையென்றும், மதிப்புவரியே வைத்துச்சேகரித்தல் சுலபமாயிருக்குமென்றும் ஒருசாரார் வற்புறுத்திப்பேசினார்கள். இப்படியாக, இவ்விஷயத்தில் அபிப்பிராயபேதங்கள் உண்டாயின. உண்டாகவே, பாக்கிப்பணி முடித்துக் கும்பாபிஷேகம் நிகழ்ந்திடவேண்டுவதே இதன் முக்கியாம்சமாகக்கொண்டு மீதியிருக்கிற தொகைக்குள் எல்லாப்பணிகளையும் பூர்த்திசெய்து கும்பாபிஷேகத்தை நடத்தும்படியாகவும், அது சம்பந்தமான பணிகட்கு வேண்டியாரும் கூட இருந்து கைங்கரியம் செய்து நிரப்பிப்பார்களென்றும் சொல்லி, பெ. ப வி.. எ. மு. இவ்விருவரிடத்திலும் கணக்கு, தொகை முதலியயாவற்றையும் ஒப்புவித்துவிட்டார்கள். இவ்வாறு முன்னேற்காக ஒப்புவித்ததும் பின்னேக்காது ஏற்றுக்கொண்டதும் ஈசுவர ஸங்கற்பத்தின் உறுதியை விளக்கிற்று. (அப்பெரும்பாரத்தைத் தாங்கிய) திருப்பணிப்பொறுப்புவாய்க்கப் பெற்றார் இருவரும் எம்பிரான் பணியிற் கண்ணுங்கருத்துமாயிருந்து பாக்கியிருந்த மண்டபரிபேர்கள், தட்டோடு போடல், கோபுரங்களின் சுதைவேலை

கள், வர்ண வேலைகள், முதலியவைகளும், இவ்வண்ணமே, ஸ்ரீ உய்யவந்த நாயகியினுடைய கோபுர சுதைவேலைகளும், தட்டோடுபோடல் முதலிய திருப்பணியாவும் பூர்த்தியாக, சுமார் ரூ 5000 வரையில் செலவிட்டு பகதாவாயச் செய்து, மிகுந்த சுறுசுறுப்புடன் முடித்துக் கும்பாபிஷேக கைங்கரியத்தைச் செய்ய எத்தனித்தகால், முன், நகரகூட்டத்தில் தீர்மானித்தபடி, இக்கைங்கரியத்துக்கு ஒத்தாசையாக உடன் வந்திருந்து நடத்த, நகரவைசியர்களில் பெரும்பாலார் தாமதமாயிருந்தமைமேனாச்சி, இத்தகைப் பெருங்காரியங்கட்கு எல்லோரும் சிரமத்தைக்கருதாமல் வந்திருந்து செய்தாலல்லது, அக்காரியங்கள் சிறப்புறுதல் அரிதாமெனநினைத்து, ஷெ இருவரும், தைமீ 3உயில் ஒரு கூட்டம் கூட்டிவைத்து, அதில், முன் சொல்லியபடி எல்லோரும் கூட இருந்து கும்பாபிஷேகத்தைச் சிறப்பிக்க வேண்டுமென்று, கேட்டுக்கொள்ள, அச்சமயம் வந்திருந்தவர்கள் அவ்வண்ணமே செய்வதாக இணங்கிக் கூட்டத்தைப்பெருமைசெய்துகொண்டார்கள் பின்னர், அதுபோல், சிவகைங்கரியங்களைச் செய்யும் பெரும்பாக்கியம நமக்கு எப்பொழுது நேருமென்று எதிர்பார்த்திருந்த ஒவ்வொருவரும் அன்று முதலே, அக்கைங்கரியத்தைக் கோயில் வாரியாக ஒப்புக்கொண்டு பேரூக்கத்துடன் நடத்திவந்தார்கள்.

பொருட்செலவையும், தேகசிரமத்தையும் சிறிதும் எதிர்பாராத திருப்பணிப்பொறுப்பாளர் இருவரும், கும்பாபிஷேக தரிசனர்க்கதம்வரும், அந்தணர் சைவர்கள், வைசியநகரத்தார்கள், ஜமீன்தார், இராஜாங்க உத்தியோகஸ்தர்கள், கோயிலூர் ஸ்வாமிகள், மற்றுமுள்ள பக்தசிரோமணிகள் முதலிய அனைவர்க்கும் அவரவர்க்குத் தக்கவாறு போஜன வசதியாதிகளும், யாகசாலை, தண்ணீர்ப்பந்தர், முக்கிய ஸ்தானங்களும் செவ்வனே செய்யப்படவேண்டுமென்று எண்ணி, நகரத்தார்களின் நல்லாலோசனையுடன் அவற்றிற்கான ஏற்பாடுகளை, பின்னும் விசாலித்துக்கொண்டு வழக்கம்போல் பிற ஊர் நகரத்தார்களையும் இக்கும்பாபிஷேக ஸம்பந்தமான வேலைகள் பலவற்றுள் ஒவ்வொரு கைங்கரியத்தை ஒவ்வொரு நகரத்தார் ஏற்றுக்கொண்டு செய்து சிறப்பிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ள, அவர்களும் அவ்வண்ணமே நிறைவேற்றுவிப்பதாக ஒப்புக்கொண்டார்கள். இவை இங்ஙனமாக, இக்கைங்கரியத்தின் பாத்திய அளவைப்பற்றி, மனோராஜ்யம் செய்துகொண்டு உள்ளூரில் அநேகம் புள்ளிகளிடம் சென்று தாரதம்மியமான போதனைகளைப் பலவாறு புகட்டி அக்கைங்கரியங்களைக் கைக்கொள்வதில் சிறிதுகாலம் தாழ்த்தல் செய்யவேண்டுமென்று மன்றாடினோர் சிலர். அவை காரணமாக, ஒப்பந்தங்கள் பேசிக்கையொப்பங்களும் வாங்கினோர் சிலர், பிறநகரங்களினும் சென்று முயற்சிக்க விரும்பினோர் சிலர். நிகழ்ந்தவரும் சிலகைங்கரியங்களைக் கண்ணுற்றிருந்தார் சிலர். கேள்வியுற்றிருந்தார் சிலர். கைங்கரிய காலம் தமக்குத்தாழ்த்ததின் பயனைச்

சீர் தூக்கித்தெளிந்து முன்னர் கையொப்பமிட்டவர்கள், சிவகைங்கரியங்களை மேற்கொண்டாரும் சிலர். இவ்வாறாக சுமார் 130 புள்ளிகளும் இத்திருப்பணியில் மேன்மேலும் சுறுசுறுப்பைப்பெருக்கும் காரணஸ்தராயினர்களென்பதாக அறிந்து செய்யவமைந்ததுபோல. கிரியைகளும் வழுவாது கும்பாபிஷேக பத்திரிகையில் வெளியிட்டபடி, அநுக்ஞை விக்நேசுவரபூஜை கடஸ்தாபனாதிகள் சிரத்தையோடு சாஸ்திரோக்தமாக நடத்தப்பெற்று, நாளது நளவருஷம் தைமூ 30உ ஆதிவாரம் ஹஸ்த நக்ஷத்திரம் உதயாதி நாழிகை 7½க்குமேல் 9க்குள் ஸ்ரீ உமாம்பிகாஸமேத ஸ்ரீ வீரசேகரநாதர்க்கும், கணேசாதி பரிவார தேவதைகட்கும், ஸ்ரீ உய்யவந்த நாயகிக்கும், பக்தகோடிகளனைவரும் தரிசித்து ஆனந்திக்க, மகாகும்பாபிஷேகம் நன்கு நிறைவேறியது.

இச்சிவகைங்கரியத்தில் ஊக்கத்தைத் தூண்டியவர்களும் செய்தவர்க்கும் ஏனைய சிவநேயச்செல்வர்கட்கும் தெய்வீகமான அஸந்தர்ப்பங்கள்கூட நேர மார்க்கமில்லாத இப்பெரிய தெய்வ வைபவத்தில் மனுஷ்யயத்ன இடையூறுகள், கதிரவன் முன் இருள்போல விலகுமென்பதைப் பிரத்தியட்சமாகக் காண்பிப்பனபோல், கும்பாபிஷேகம் செய்து கொண்டிருக்கும் தருணத்தில் உபய கருடன்கள் தரிசனந்தந்து அனைவரையும் அகமகிழ்வித்தன.

மகாபிஷேகம் செய்து பூர்த்திபெற சற்றுத்தாமதித்தமையால், மாலை 6 மணிமுதல், முறையே ஸ்ரீமான் சிவகங்கை ஜமீன்தாரவர்களாலும், தேவகோட்டை கண்டனூர் கோட்டையூர் அனகாபுரி பள்ளத்தூர் அரிமளம் கீழச்சிவல்பட்டி தெற்குவட்டகை முதலாகிய பல நகர் நகரத்தார்களாலும் ஸ்வாமிக்குப் பட்டுகள் சாத்தப்பட்டன.

அழகாக அலங்கரிக்கப்பட்ட தண்ணீர்ப்பந்தரில் கும்பாபிஷேக தினத்துக்கு முதனாளிரவில், ஞா பி. கலாசாலை ஆசிரியர் ஸ்ரீமத் C. துரைசாமி தேசிகரவர்களால் பக்க வாத்தியங்களுடன், ஸ்ரீ சேரமான் பெருமாணாயனார் சரித்திரமும், கும்பாபிஷேக தினத்தன்று மாலை மேடி ஞா. பி. ஸபையின் 7வது-ஆ 8வது மாதக்கூட்டப் பிரஸங்கங்களும் செவ்வனே நடைபெற்றன

அன்றிரவு பஞ்சமூர்த்திகளும் ஸ்ரீ உய்யவந்த நாயகியும் ரிஷபமாதி வெள்ளிவாகனங்களில, வேதபாராயண தேவாரபாராயண நாமாவளி பஜனை கோஷ்டிகளுடன் நானாவித வாத்தியங்கள் கோஷிக்கவும் பல்வகை விசித்திர வாணக்காட்சிகள் பொருந்தவுமாக திருவீதிப்பவனியும் சிறப்பாய் நிறைவேறியது.

இக்கும்பாபிஷேக மகோற்சவத்துக்கு ஸ்ரீமான் சிவகங்கை ஜமீன்தாரவர்களும், ஸப்ஜட்ஜ் முன்சிப் முதலிய ப்ரமுகஸ்தர்களும் விஜயஞ்செய்திருந்தது குறிப்பிடத்தக்கதே.

இம்மஹோத்சவத்தை முன்னிட்டு வந்திருந்த ஜனங்களனைவருக்கும் தேகாரோக்கியங்களுக்கேற்ப சுத்த ஜலம் முதலிய வஸதிகளும், பொது ஜனோபகாரிகளின் ரக்ஷணார்த்தம் போலீஸாரின் பெரும்பாதுகாப்பும், நகரத்தார்களால் நியமிக்கப்பட்ட காவற்காரர்களின் சுறுபாதுகாப்பும் அமைந்திருந்தது மிகவும் மெச்சத்தகுந்தது.

இவ்வைபவத்தைக் கண்ணுற்ற ஜனங்களின் ஸங்கியை சுமார் 40,000 த்துக்கு மேற்பட்டிருக்குமாதலால், இதன் விமர்சையைப்பற்றி இனி விரித்தெழுதல் மிகையாகும்.

நகரத்தாரால் கொடுக்கப்பட்ட ரூ. சுமார் 15000க்கு மேல் பின்னும் சுமார் ரூ. 18000 வரையில் இத்திருப்பணிப் பொறுப்பாளர் இருவராலும் விநியோகப்படுத்தப்பட்டிருக்கக்கூடுமென்று மதிப்பிடப்படுகிறது.

இச்சிவ கைங்கரியத்தை நன்குறநிறைவேற்றிய புதுவயலாதிநகரவைசியர்களும், அன்புடன் வந்து தரிசித்த அடியார்களும், எம்மையாளும் சக்கிரவர்த்தியும் மும்மைப்பயனுமெய்தி நீடூழிவாழுமாறு எல்லாம்வல்ல இறைவனது திருவருளைப் பிரார்த்திக்கின்றோம். உண்மைகண்டுரைப்போர்.

மதிப்புரை.

நமது புண்ணிய பூமி:-இது காசி கே. என். முத்தையாஅவர்களால் இயற்றப்பெற்றது. இது புண்ணிய ஸ்தலயாத்திரிகர்களின் பொருட்டு இயற்றப்பெற்றுள்ளது. இதனுள் காசி, பூரி (ஜகந்நாதம்) கயா, பிராயகை, அயோத்தி, ஹரித்வாரம், குருக்ஷேத்திரம், மதுரா (Muttra) கோகுலம், பிருந்தாவனம், திருத்தணி, திருப்பதி, காளஹஸ்தி, பண்டரிபுரம், நாசிக் (பஞ்சவடி) முதலான பல க்ஷேத்திரங்களுக்குப் போகும் மார்க்கங்களும் இறங்கவேண்டிய ரயில் ஸ்டேஷன்களும் விவரமாகக் காட்டப்பட்டிருப்பதுடன், அந்தந்தக்ஷேத்ரங்களின் புராதன நவீன சரித்திரப்பகுதிகளும் நன்கு எழுதப்பெற்றுள்ளது. பல சித்திரப் படங்கள் அழகாகக் காட்டப்பெற்றுள்ளன. இதன் விலை அணா 12தான். இதனையியற்றியார் இவற்றைத் தொகுத்து எழுதி யச்சிட்டவ்வளவு சிரமத்திற்கும், இப்போதுள்ள காகிதப் பஞ்சத்தினாலுண்டான சிரமத்திற்கும், இந்த விலை மிகவும் குறைவானதென்றே சொல்லலாகும். புஸ்தகமும் கையில வைத்துக் கொள்ளக்கூடிய அளவு சிறிதாகவும் அழகாகவும் இருக்கிறது. தத்துவங்களைப் போல் 96 பக்கங்கள்கொண்டது. இதனை வாங்கிப் படித்து 96-பக்கங்களையும் கடந்தவர், தத்வாதீதனை எம்பிரானை இருதயகுகையில் என்றும் வைத்து ஆராதித்தவரும் ஆவார் என்பதில் யாதும் ஸம்சயமில்லை.

காலஞ்சென்ற
ஸ்ரீமான் S. இராதாகிருஷ்ணையர் B. A., F. M. U.

இத் தமிழ்நாட்டுப் பெரியோர்களுள் ஒருவராகிய இவரது சரித்திரம் படிப்பவர்களுக் கெல்லாம் ஊக்கத்தைக் கொடுத்துக் கல்வியில் ஆசையைப்புகட்டிச் சோம்பேறிகளையும் முயற்சியுள்ளவர்களாக்கும். ஆகலால், அதனை எனக்குத் தெரிந்தவளவிற் சுருக்கி யெழுதுகின்றேன். இது இவர் தம்பியாகிய (புதுக்கோட்டை ஸ்டேட் டிரெஷரி ஆபீஸரும், முதல் கிளாஸ் டிப்டி மாஜிஸ்ட்ரேட்டாயிருந்து பென்ஷன் பெற்றிருக்கிற) ஸ்ரீமான் S. நாராயணஸாமி ஐயர் M. A அவர்களாலும், இவர்களுக்கு நெருங்கிய பந்துவாகிய வக்கீல் M. இராமஸ்வாமி ஐயர் B. A. அவர்களாலும் எனக்குக் கிடைத்த குறிப்புகளையும், சென்ற 9 வருஷகாலமாக நான் நேரிற் பழகியறிந்தவற்றையுங் கொண்டு எழுதப் பெறுகின்றது.

'புதுக்கோட்டை ராதா கிருஷ்ணையர்' என்று உலகப்பிரசித்தி பெற்ற இப்பெரியார், தஞ்சாவூர்ஜில்லா ஐயம்பேட்டைக்கடுத்த சூலமங்கலம் என்னும் கிராமத்தில் ஓரேழைப் பிராமண குடும்பத்தில் 1861௵ நவம்பர்௴ 28௳க்குச்சரியான துர்மதி௵ கார்த்திகை௴ ௧௪௳ பிறந்தார். இராஜப்பையர் என்ற சீதாராமையர் என்பது இவர் தகப்பனார் பெயர். இந்தச்சீதாராமையர் தம்மூத்த குமாரராகிய இவரை ஐந்துவயதில் அக்ஷராப்பியாசம் பண்ணுவித்து அக்காலத்து முறைப்படி அவ்வூரி லிருந்த ஒரு பள்ளிக்கூடத்திற்கு அனுப்பிக் கிரந்த அரிச்சுவடிமுதல அமரம்வரையுள்ள பாடங்களை 10 வயதிற்குள்ளே படிப்பித்துவிட்டுப் பரகதியடைந்தார். அவர் காலஞ்சென்ற 2 மாதத்திற்குள் அவர் மனைவியின் காலமுஞ் சென்றுவிட்டது.

10 வயதிலேயே பெற்றோர் இருவரையு மிழந்த இராதாகிருஷ்ணையர், பின்னர்த் தரங்கம்பாடிக்குப்போய், அங்கே வக்கீலாயிருந்த சிறியதகப்பனார் இராமஸ்வாமி ஐயருதவியால் இங்கிலீஷ் ஸ்கூலிற் சேர்ந்து ஒருவருஷம் படித்துவிட்டு, 1873 ௵த்தில் கபிஸ்தலம் என்னும் ஊருக்குப்போய் அவ்வூர் மூப்பனாரால ஸ்தாபிக்கப்பெற்ற மிடில் ஸ்கூலிற் சேர்ந்து இரண்டு வருஷம் வாசித்தார். இங்கே வாசிக்கும்பொழுது ஒருமுறை இதற்குத்தென்மேற்கே ஆறேழு மைல் தூரத்திலுள்ள தமது ஊராகிய சூலமங்கலத்திற்குப் போய்த் திரும்பினார். அது மாரிக்காலமாதலால் தம்மூர்க்கும் கபிஸ்தலத்திற்கும் இடையிலுள்ள இரண்டாறுகள் திடீரென்று பெருக்கெடுத்து இவரை நேரே வடகரை செல்லவொட்டாமல் தடுத்து விட்டன. வெள்ளம் வடியும் வரையில் ஊரிலே தங்கிவிட்டால் பாடம் தவக்கப் பட்டுப்போம். இதனையோசித்த இராதாகிருஷ்ணையர் 12 வயதுச்சிறு பிள்ளையாயிருந்தும், படிப்பிலுள்ள அக்கரையினாலே எப்படியும் ஆறுகளுக்கு அக்கரை போகவேண்டுமென்றெண்ணி, தம்மூரிலிருந்து நேர்மேற்கே போய்த் திருவையாற்று ரஸ்தாவிலுள்ள பாலங்களின் வழியே ஆறுகளைக்கடந்து, மறுபடி கிழக்கே திரும்பிச்சென்று கபிஸ்தலம் சேர்ந்தார். இதில் ஒன்றுக்கு மூன்றுபங்கு நடை அதிகமாயினும் படிப்பிலிருந்த ஆசையினாலே அதனை லட்சியஞ் செய்யவில்லை.

இவ்வண்ணம் ஊக்கத்தோடு இரண்டு வருஷம் படித்துவிட்டுக் கபிஸ்தலம் ஸ்கூல் ஹெட்மாஸ்டருடைய சிபார்சின் பேரில் 1875௵ கும்பகோணம் காலேஜில் ஐந்தாவது வகுப்பிற் சேர்ந்து, இரண்டு வருஷம் படித்து 1877-ம் வருஷ ஆரம்பத்தில் நடந்த மெட்ரிகுலேஷன் பரீக்ஷையில் சென்னை ராஜதானிக்குள் இரண்டாவதாகத்தேறி, ஸர். டி. மாதவராவ் பிரைஸ் என்றுசொல்லப்படும் வெகுமதி ரூ 50ம், எப். ஏ. பரீக்ஷைக்குப் படிக்க ஸ்காலர்ஷிப்பும் பெற்று, அங்கேயே படித்து 1879-ம் வருஷ ஆரம்பத்தில் எப. ஏ. பரீக்ஷையிலுந்தேறினார். இப்பரீக்ஷைக்குப்போன ஸமயத்தில் இவருக்கு உடம்பு அசௌக்கியமானமையால் முதலாவதாகத் தேறிபரிசுபெற இயலவில்லையாயினும், இவரது புத்திநுட்பத்தை யறிந்த காலேஜ் உபாத்

தியாயர்கள் "சொஞ்சுற அருங்கலைகள் கற்றுமவர் தம்மனவில் நேய நிகழாதவர்கள் யார்" என்று விலவிபுத்தூராழ்வார் கூறியவண்ணம் மனங்கசிந்து இவரை அக்கேயே வைத்துக்கொண்டு அன்புடன் படிப்பித்தார்கள். இவரும் அவ்வாறே மேலும் இரண்டுவருஷம் படித்து 1881-ம் வருஷ ஜனவரிமாதத்தில் பீ. ஏ. பரீக்ஷைக்குப் போய் பிரஸிடென்ஸிக்குள் இரண்டாவதாகத் தேறிப் பட்டம்பெற்றார். அச்சமயத்தில் இங்கிலீஷ் பரீக்ஷாதிகாரியாகிய மிஸ்டர் போர்ட்டர் துரையவர்கள், இவரது இங்கிலீஷ் பாஷை ஞானத்தைப்பற்றி இவரை நிரம்பக் கொண்டாடினார்.

இவ்வாறு கல்விகற்றுத் தேர்ந்தபிறகு வேலைக்குப்போக உத்தேசம் பண்ணினார், அச்சமயம் புதுக்கோட்டைக் காலேஜானது ஹைஸ்கூலாயிருந்தது. அதற்கொரு உதவியுபாத்தியாயர் வேண்டியிருந்தமையால், கும்பகோணம் காலேஜ் பிரின்ஸிபாலாயிருந்த மிஸ்டர் T. கோபாலராவ் அவர்கள், தம்மாணாக்கராகிய இவரைத்தேர்ந்தெடுத்து, திவான் சேஷையா சாஸ்திரிகளுக்குச்சிபார்சு செய்து அனுப்பினார்கள். அதனால் இராதாகிருஷ்ணையர் 1881-வருஷ மார்ச்சு மாதத்தில் (19 ஆகி 20-வது வயது) புதுக்கோட்டைக்கு வந்து மகாராஜா ஹைஸ்கூலில் இரண்டாவது உதவியுபாத்தியாயர் வேலையை யொப்புக்கொண்டு சிலமாதம் பார்த்துப் பிறகு முதலுதவியுபாத்தியாயரானார். அதன்பின் 1882-ம் வருஷத்தில் ஷை ஹைஸ்கூல் காலேஜாக மாறிற்று. அதிலும் முதலுதவியாகவே யிருந்துவந்த நம் ஐயரவர்கள் 1895-வரு ஜூலை மாதத்தில் பிரின்ஸிபால் வேலையை யொப்புக்கொண்டார்கள். அதனையொப்புக்கொண்டு மிகவுந்திறமையுடன் பார்த்து வரும்பொழுது, 1897-ம் வருஷத்தில் சென்னைராஜாங்கத்தின் தமிழ் மொழிபெயர்ப்பாளர் (Tamil Translator to Government) வேலை காலியானதால் அதனை இவர்க்குக் கொடுக்க வேண்டுமென்று மதராஸ் கவர்ன்மெண்டு செக்ரடேரிக்குச் சிபார்சு செய்து, திவான் சேஷையா சாஸ்திரிகள் கும்பகோணத்திலிருந்து 1897 வரு அக்டோபர் 28உ அனுப்பியகடிதத்தில் எழுதியதாவது:—

"* * * இவர் (பீ. ஏ. பரீக்ஷைக்குத்) தமிழை உபபாஷையாக எடுத்துக் கொண்டார். ஆனால் சாவகாசகாலங்களில் பிரத்தியேகமான பயிற்சியால்

அந்தப்பாஷா ஞானத்தை மிகவும் விருத்தி செய்து கொண்டார். தமிழ்ப் பாஷையிலுள்ள இலக்கிய இலக்கணங்களின் விஸ்தாரமான சரித்திரங்களில் இவருடைய பிரக்ஞை மிகவும் விசாலமாயிருக்கிறது. அப்பாஷையில் பூர்த்தியான பாண்டித்தியம் பெற்ற ஒரு பண்டிதருக்கு ஒரு வழியிலுங் குறைந்தவராயில்லை. இவருடைய தமிழ்வாசகங்கள் அநேகபள்ளிக்கூடங்களில் பாடபுத்தகங்களாக வைக்கப்பெற்றிருக்கின்றன. இவருடையவசனநடை எளியகம்பீரமான கதியுள்ளதாயிருக்கிறது. * * * இவர் தமிழில் பிரதான பரீக்ஷகராகவும், மிகவும் தகுதியுள்ளவராகவும் இருந்திருக்கிறார். மேலே கூறியவை களெல்லாம் அந்த (Tamil Translator) வேலைக்குண்டான முக்கிய உரிமைகள். இவருடைய பண்டித லக்ஷணங்களுக்குண்டான பொதுவுரிமைகள் மிகவும் மேம்பாடுள்ளவைகள். இவர் அங்ககணித சாஸ்திர பிரக்ஞையுடன் பிறந்தவர். இவரது கணக்குப்புத்தகம் இதுவரையெழுபதிப்பாகி, இந்தியா முழுவதிலும் பரவியிருக்கிறது. இவரால் செய்யப்பட்ட பீஜகணிதம் (Algebra) லண்டன் ஸர்வகலாசாலைப் பரீக்ஷைகளுக்கு (Intermediate Text-book) ஏற்ற பாடபுத்தகமாக ஒப்புக்கொள்ளப்பெற்று, கேம்பிரிட்ஜ் ஸர்வகலாசாலைக் கென்று கியாதிபெற்ற புத்தகப்பிரசாரகர்களால் ஒரேகாலத்தில் இந்தியாவிலும் இங்கிலாந்திலும் அனுஷ்டானத்திற்குப் பதிக்கப் பதிக்கப்பட்டது பின்னும் இவர்களாலேயே, ஸமக்ஷேத்திர திரிகோண சாஸ்திரத்தில் (Plane Trigonometry) ஒருபுத்தகத்தை இங்கிலாந்திலும் இந்தியாவிலும் உள்ள ஸ்கூல்களின் உபயோகத்திற்காக வெளி வரச்செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளப் பட்டிருக்கிறார். இவருடையவேலைகள் ஐக்கியமாகாண (United States)வாசிகளாலும் மெச்சிக்கொள்ளப்பெற்றன. இவர்சென்னைச் சர்வகலாசாலைக் கணிதவுதவிப் பரீக்ஷகராக அநேக வருஷகாலம் இருந்தார். இவர் 'செனொபன்' (xenophon) என்னும் புத்தகத்திற்கெழுதிய இங்கிலீஷ் வியாக்கியானம் மெஸ்ஸர்ஸ்-ஸ்டோன்-டாட்ஸின் முதலியவர்களைப் போன்ற ஆங்கில பண்டிதர்களாலே வியந்து பாராட்டப் பெற்றது. இவர் மேற்சொன்னவாறு கணிதஞானமுடையராயிருப்பதுடன் இங்கிலீஷ்பாஷை ஆராய்ச்சிகளில் தேர்ச்சியடைந்தபண்டிதராகவும் இருக்கிறார். அவ்விஷயத்தில் அவருடைய ஆராய்ச்சிகள் விசாலமாயும், சூக்ஷமமாயும் இருந்து வருகின்றன. மொழிபெயர்ப்பாளர் வேலையை இவர் அபேக்ஷிப்பதானது அதிகச்சம்பளத்தை யுத்தேசித்தன்று; 250-க்கும் 300-க்கும் உள்ள வித்தியாசம் ரூ50 தான், இதொருபெரிதன்று இவருடைய அந்தரங்கஅபிப்பிராயம் தமக்கு விசேஷபிரக்ஞையுள்ள சாஸ்திரங்களிலல்லவாயல, இன்னும் இதரசாஸ்திரங்களிலும் தொடர்ந்த ஆராய்ச்சிக்குப்போதுமான அவகாசங் கிடைக்கவேண்டுமென்பதேயாம். இவருடையமுயற்சி பலிக்கக்கூடிய அதிருஷ்டத்தைப் பெறுவாரச

யின் இவர் ஸம்பூர்ணமான முதல்தரமொழிபெயர்ப்பாளராக இருப்பார். காலேஜ் பிரின்ஸிபல் உத்தியோகம் இவருடைய எல்லாக் காலத்தையும் சக்தியையும் குறையச் செய்கிறது. * * * ''

இவ்வளவும் அக்கடிதத்தின் ஒருபாகமேயாம். மற்றைப்பாகத்தில் மற்றுஞ்சில முக்கியமான காரணங்களாலும் அவ்வேலை மிஸ்டர் இராதாகிருஷ்ணயருக்கே கொடுக்கப்பட வேண்டுமென்று காட்டப்பட்டிருந்தது. உலகப்பிரசித்திபெற்ற சேஷையா சாஸ்திரிகள் அவ்வளவெழுதியும் அவ்வேலை இவருக்கன்றி மற்றொருவருக்குக் கொடுக்கப்பெற்றது. அதுவும் புதுக்கோட்டைக்காலேஜின் அதிருஷ்டம் என்றே சொல்லவேண்டும். 1882 ல் இது காலேஜானது முதல் 13½ வருஷம் முதலுதவியாகவும்; அப்பால் 1912ம்-ஷு ஜூலை வரையில் 17 வருஷம் பிரின்ஸிபலாகவும் வேலைபார்த்து உழைத்துக் காலேஜை முன்னுக்குக் கொணர்ந்தவர் இவரே. 1881-ஷுத்தில் ஹைஸ்கூலாயிருந்தபொழுதும், இவர் 9மீ வேலைபார்த்திருந்ததால், புதுக்கோட்டை மகாராஜா ஹைஸ்கூலைக் காலேஜாக்கி, 31¼ வருஷம் அல்லும் பகலுமாக வுழைத்து, அதனை இப்பொழுதிருக்கும் உன்னதஸ்திதிக்குக் கொணர்ந்துவைத்த மகான் இந்த ராதாகிருஷ்ணயராவர். இவர் இடையே எழெட்டு வருஷகாலம் புதுக்கோட்டை ஸ்டேட் கல்வியிலாகா டைரெக்டர் வேலையையும் சேர்த்துப் பார்த்திருக்கிறார். 1899-ல் இவர், சென்னைச் சர்வகலாசாலைச் சபாக்களில் ஒருவராகி F. M. U. என்னும் பட்டம் பெற்றார். அதற்கு முன்னும் பின்னுமாக அநேக வருஷகாலம் ஷை யூனிவர்ஸிடியில் B. A, M. A. வகுப்புகளுக்குப் பரீக்ஷாதிகாரியாயிருந்திருக்கிறார். மதுரைத் தமிழ்ச்சங்கத்துப் பரீக்ஷைகள் ஏற்பட்டபிறகு அவற்றிற்கும் இவர் பரீக்ஷாதிகாரியாயிருந்திருக்கிறார். இவரிடத்தில் மாணாக்கர்களுக்கும் மேலதிகாரிகளுக்கும் தக்க மதிப்புண்டு.

இவ்வண்ணம் 20-வது வயது முதல் புதுக்கோட்டையிலேயேயிருந்து 31¼ வருஷம் வேலைபார்த்தபிறகு 1912 ஷு ஜூலை மாதத்தில் (ரூ. 300 சம்பளத்திலிருந்து ரூ. 150) பென்ஷன் பெற்றுக்கொண்டார். அதன் பின்னரும் ஷை ஸ்டேட்டுக்கு மிகவும் உபயோகமான வேலைசெய்ய ஆரம்பித்து, 'புதுக்கோட்டை ஸம்ஸ்தான

சரித்திரம்' 'ஸ்டேட்மானியூல்' என்னும் இரண்டு புத்தக மெழுதி வெளியிடலானார். அவற்றுள் ஸம்ஸ்தான சரித்திரம் அச்சாகி விட்டதென்றும், ஸ்டேட்மானியூல் அச்சிலிருக்கிறதென்றும், அவ்விரண்டுங் கூடியசீக்கிரத்தில் வெளிவருமென்றும் தெரிகிறது. மேலும் இவர், இக்காலத்துத் தமிழை வளர்க்க வந்த தாய்போல் விளங்குகின்றவரும், மதுரைத் தமிழ்ச் சங்கத்து உபஅக்கிராஸனாதிபதியும் ஆண்டிப்பட்டி ஜமீந்தாருமாகிய ஸ்ரீமான் பெத்தாச்சி செட்டியார் அவர்களின் பொருளுதவி கொண்டு, ஒருகமிட்டி ஸ்தாபித்து தமிழ் நூல்களின் வரலாறு (History of Tamil Literature) என்னும் புத்தகம் எழுதிவெளியிட ஏற்பாடு செய்து வந்தார். இடையிடையே மதுரைத் தமிழ்ச்சங்கத்துச் செந்தமிழ்ப் பத்திரிகையிற் சிற்சில ஆராய்ச்சிகள் வெளியிட்டதுமுண்டு. இவரிடமிருந்த பிரதான குணங்களாவன:—

1. விடாமுயற்சி—இவர் மேற்கொண்ட காரியத்திற்கு எத்தனை யிடையூறுவரினும் அவற்றை லட்சியஞ் செய்யாமல் முயன்று காரியசித்தி பெறுவார். இது இளமையிற் கபிஸ்தலத்திற்கு ஆறு தாண்டிச் சென்றமை முதலியவற்றாற் புலனும்.

2. கல்வியில் விருப்பம்—இவர் சரித்திர முற்றிலும் இக்குணமே மேம்பட்டு விளங்கும். அதனால், ஆங்கிலம் கணக்கு சரித்திரம் தமிழ் ஸம்ஸ்கிருதம் ஸங்கீதம் என்னும் பலவற்றையும் முறைப்படக் கற்றுப் பண்டிதரானார். ஒன்றைக் கற்கத்தொடங்கி விட்டால் அது முடியும்வரை இவர் மனம் சொல் செயல் என்னும் மூன்றும் அதிலேயே சென்றுகொண்டிருக்கும். தாம் யாரைச் சந்தித்தாலும் அவரிடம் அது விஷயமாகவே பேசுவார். ஒருபுத்தகத்தை யெடுத்தால் அதனை ஐயந்திரிபறக் கற்றபின்னரே மற்றொன்றை யெடுப்பார். நல்ல ஞாபகசக்தியுடையவராதலால், பிறருக்கு அருமையான காரியம் இவருக்கு லேசாயிருக்கும். 31 வது வயது வரையிற் சங்கீதமென்பது இன்னதென்றும் அறியாதிருந்த இவர், ஒருமுறை ஸ்நேகிதரொருவராற் பரிகசிக்கப் பெற்று, அன்றைக்கே அதனைத் தொடங்கி 3 மாதத்திற்குள் 50 கீர்த்தனம் பாடக்கற்றார். அப்பால், ஸங்கீத ரத்னாகரம், இசைநுணுக்கம் முதலிய சங்கீத சாஸ்திரங்களையெல்

லாம் ஆராய்ந்து ஒரு புத்தகம் எழுதினர். (அது இன்னும் அச்சிடப்படவில்லை.) 'தீக்ஷிதர் கிருதி' என்று வழங்கும் கீர்த்தனைகளைச் செய்து தமிழ்நாட்டுக்குதவிய தீட்சிதர் வம்சத்திற் பிறந்த (எட்டையபுரம் ஸம்ஸ்தான வித்வான்) சுப்பராம தீட்சிதரவர்கள் எழுதிப்பதிப்பிட்ட 'ஸங்கீதஸம்பிரதாய ப்ரதர்சினி' என்னும் புத்தகத்தின் முகவுரையில் 'இரத்னாகரம் முதலான ஸங்கீத லட்சணசாஸ்திரங்களை ஆராய்தலில் எனக்கு மகா-ா-ா-ஸ்ரீ இராதா கிருஷ்ணையர் செய்தஉதவி எப்பொழுதும் நினைக்கத்தகுந்ததாயிருக்கிறது' என்று எழுதுவாராளாயின், இவரது ஸங்கீத சாஸ்திரப் பயிற்சியைப் பற்றி என்னென்றுரைப்பது!

3. உண்மை—இவர் விளையாட்டுக்கேனும் பொய் பேசாதவர், ஸ்நேகிதர்களிடத்திலாவது பந்துக்களிடத்திலாவது தம்மிடத்திலாவது பிழைகண்டால், உள்ளதை உள்ளவாறே சொல்லிவிடுவார்.

4. பரோபகாரம்—பரோபகார சிந்தை இவரிடங் குடிகொண்டிருந்தமையால், படிப்பவர்க் கெல்லாம் மனமாரப் போதிப்பார். வேண்டியவர்களுக் கெல்லாம் புத்தகமுங் கொடுத்துத் தம்மாலியன்ற தானதருமங்களும் செய்து வந்தார்.

5. இராஜபக்தி—புதுக்கோட்டை யரசரிடத்தும் இந்தியா சக்கிரவர்த்தி யிடத்தும் பக்திபூண்டிருந்ததுடன், இப்பொழுது நடக்குங் கொடிய யுத்தம் பிரிட்டிஷாருக்கு வெற்றியுடன் முடிவடைய வேண்டு மென்று பிரார்த்தித்துச் சூலமங்கலம் பெருமாள் கோவிலில் நித்தியார்ச்சனையும் செய்வித்து வந்தார்.

6 தெய்வபக்தி—தினந்தோறுங் கோயிலுக்குப் போய்வருவது இவரது வழக்கம். சிற்சில பாராயணங்களும் பஜனைகளும் தவறாமற் செய்து வந்தார். இவை போன்ற பல நற்குணங்களும் இவரிடம் விளங்கின.

இத்தகைய பெரியாராகிய இராதா கிருஷ்ணையர், சென்ற இரண்டு வருஷகாலமாகத் தம் அருமைக் குமாரனது படிப்பையும் மற்றுஞ்சில சௌகரியங்களையும் உத்தேசித்துத் தஞ்சாவூரில் வசித்து வந்து, சென்ற ஜெனவரிமீ 21உ (நளஹு தைமீ ௭௨.) 15

வயதுள்ள தம் அருமைக்குமாரனையும் மனைவியையும் தம்பி முதலிய சுற்றத்தார்களையும் விட்டுப்பிரிந்து பரகதி யெய்தினார். இவர் நல்லவராதலால் இவரது ஆத்மா சாந்தியடைந்திருக்கும். இவர் பிறவிச் செல்வரல்லராயினும் தம் குமாரனுக்கு வேண்டிய அளவு பொருள் தேடிவைத்திருக்கிறார். இனி இவர் குடும்பத்தைக் கடவுள் இரட்சிப்பாராக.

அ. கோபாலையன்.

புதுக்கோட்டை

ஹிஸ் ஹைனஸ் மகா-ள-ள-ஸ்ரீ மகாராஜா அவர்கள் காலேஜ்

லேட் பிரின்ஸிபால்

ஸ்ரீமான் S. இராதாகிருஷ்ணையர் B. A., F. M. U.

அவர்கண்மீதியற்றிய

சாமகவி மாலிகை.

பத்திரிகை மூலமதா லுடலுயிரெல் லாம்பதைக்கப் படித்தே னந்தோ
எத்தினத்து மித்தினந்தா னென்கொடிய தினமறியே னெனக்கு மோது
வித்தகுரு ராதாகிருஷ்ணையனித்த வுலகத்தை விடுத்தா னம்ம
இத்தரணி வாழ்க்கையிதே யெனவிறந்து மோதுவித்தா னென்ன சொல்வேன்.

கலைமடந்தை யோதுகின்றா ளெனுங்கூற்றுக் கிலக்கியமா யாங்கள் காணத்
தலையெடுத்த நாண்முதலிக் காலளவு மோதுவித்தே சாலக் கொண்டா
புலையடுத்த மெழுகெனவென் னுயிருருக வுடலிருக்கு முரந்தா னென்னே
முலைகொடுத்த மாதாவிற் கலைகொடுத்த தாதாவே முதன்மை யன்றோ. 2

ஒருமைந்தன் வேம்பனைநீ பிரிந்தவன்மை யுணரவல்லே முன்பா லோத
வருமைந்தர் கரும்பனையார் பலர்கடமை நீபிரிந்த வகைதா னென்னே
தருமந்தா னோவிதையா வறியாமைத் திறனுல்யான் சாற்று கின்றே
னருமந்த பிள்ளையினு மினிதம்மகாலோ வீடென்னு மந்தக் காடே. 3

கண்ணிகரா மெண்ணெழுத்திற் கருத்தரிய பாண்டித்யங் கலனாப் பூண்டோய்
மண்ணிகரா தாங்குந் வானுலகந் தனக்கென்றோ வங்கே சென்று
யெண்ணரிதாங் கலைமுழுது மிவ்வுலகத் தேயுணர்ந்தா யங்கே சென்றும்
புண்ணியந்தா னென்னவினி யாதுணர்வாய போதநிறை புகல மாலே. 4

நற்றமிழில் வடமொழியி லாங்கிலத்தி லொருபுலமை நாட்டி நின்றோய்
கொற்றவர்கள் புகழுமெங்கள் குருமணியே குருவுனைப்போற் குவலயத்தே
யெற்றினியாங் காணவலேம் பிரிந்தனைய ரொருநாளைப்பேம் யாங்க ளினிமே
யுற்றுற்ற விட்டனைநீ கணடகம் யாதுகொலோ வொளிர்யான் போந்தே. 5

உருவெடுத்த சத்தியமே யொருநாளு மனஞ்சொல்செய லொருங்கே காட்டும்
பெருநடத்தைப் பெருமானே யெத்திசையும் பரவவளர் பெரிய கீர்த்தித்
திருவளர்த்த கோமானே யென்பனடைப்பா ணிவண்விட்டு வீடு சென்றாய்
தருகிசர்தத காவன்னால் பிரிந்துயர் மனத்திடைமே சகித்தொ ணாதே. 6

துங்கமார் பலவளமுங் குலவுதஞ்சை நாடதனைச் சார்ந்த சால
மங்கலமா நகர்தன்னிற் புகழுடனே தோன்றியெங்கண் மன்னர் மன்னன்
பொங்கிவளர் புதுக்கோட்டைக் காலேஜிற் பெரும்புலமை புரிந்து நின்று
மெங்கணன்றுமெமைப்பிரிந்தாயினியுன்றன் முகமலரையினிக்காண் பேமோ. 7

சென்னைகலா சங்கமதா மரைத்தமிழ்ச்சங் கத்தினுக்கோர் திலகம் போன்றோய்
தன்னிகரி லாப்புலவர் சிரோமணியே கற்றடங்கத் தகைமை மேலா
யுன்னுடைய பெருமையெலா மின்னவெண வுரைக்கவல்ல பான்மை யுண்டோ
மன்னுலகிற் காணுமின் னியற்பெருமை கண்டறிற்பல வடங்கே யன்றோ. 8

பன்னூற்க ளியற்றியுல கினுக்களித்த பண்டிதனே பரிவான் முன்வந்
தென்னாற்றி ரட்டிலுக்கோ ரினியபா யிரமீந்தாய் தொளாயி ரத்துப்
பன்னேழு ஜனவரியி லிருபானான் கிற்சாந்தி பதவி பெற்று
மென்னையா யாதுபயம் யாரிடத்தி லேகூறி யிரங்கு வேனே. 9

பிரிந்தனையென் றேங்கினைந்தே யித்தனைநா ளம்யானும் பிதற்றி நின்றேன்
பிரிந்திலைநீ பிரிந்திலைநீ பேதையென்றன் மனத்தாமரை பிரியா தோங்கி
யிருந்தனைநீ யிருப்பிடமா யணிசிய நின்குணங்க ணம்பியீடணிருக்கிலையோ வென்
மருந்தனைய குணமிகுந்த பாதசிரந் தோமவொங்கள் மகத்தான சோலை. 10

சென்னை,
23—1—17.

மிஸ்ரு ஆருத்திரன்.

ஒழுக்கத்தின் உயர்வு.

"ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்"—திருவள்ளுவர்.

கடவுள் மனிதரைப் படைத்து, அவர் முயற்சியால் தன்னை த்யானித்து தன் அறிவையும் பெற்று தன்னோடு கலக்கவும் வழி கொடுத்திருக்கிறார்.

ஆன்மா, தனது துச்சிலாகிய உடலின் வசப்பட்டுச் சில சமயங்களில் மிருகாம்சமான காமாதிகளில் உழல்வதாயினும், கடைசியாக எந்த விதத்திலேனும், தனது தலைவனான அருட்பெருஞ் சோதியுடன் கலக்கவேண்டியதேயாகும்.

ஆன்மா உடலினின்றும் தனித்திருக்கும் இயல்புடையது. உடலில்லாமலும் அது வசிக்கக்கூடும்.

ஆன்மா அழியாதது. அஃது இந்த உடலை, தனது யாத்திரையின் வாசஸ்தானங்களில் ஒன்றாகக் கொண்டுள்ளது.

ஆன்மா ஒரு தேகத்தைப் பற்றியிருப்பதானது, அடிக்கடி உடல் விட்டு உடல் பாய்வதற்கன்று. தனது நீண்ட யாத்திரையில் தன்னுடைய தர்மத்தை உயர்த்திக்கொண்டு கடவுளைக் கிட்டுவதற்காகத்தான்.

ஆகையினால் பிராணாயாமாதிகளினாலாவது, ஆன்மா தனது இவ்வுடலுடன் கூடிய வாழ்நாளைப் பெருக்கிக்கொண்டிருந்து தனது தர்மத்தைத் திருத்திக்கொள்வதில் நோக்கமுள்ளதாக இருக்கவேண்டும்.

இனியொருதாய் வயிற்றில் பிறந்துழலாது இருக்க முயல்வதே மோக்ஷம் என்று குறிக்கப்படுகிறது. அதற்காக ஆன்மாவானது, பரோபகாரம் ஜீவகாருண்யம் கண்ணியம் ஸத்யம் இவற்றில் அடிக்

கடி பழகிவரவேண்டும். இவைகள் தாம் கடவுளினுடைய நிவிருத்தி மார்க்கச் சட்டத்தின் படிகளாகும்.

மோக்ஷமென்பது பாபத்திலிருந்து விடுபடுதலும் புண்ணிய ரூபனான கடவுளுடன் ஒன்றுபடுதலுந்தான். இவை இரண்டும், உயர்ந்த மதக்கொள்கைகளில் நம்பிக்கைகொண்டு, நமது அறிவிற் சிறந்த பெரியோர் ஏற்படுத்தியிருக்கும் ஒழுங்குகளின்படி ஒழுகி வருதலாலே மாத்திரம் லித்திபெறுமல்லாமல், அதிகாரத்தினலாயினும் ஆடம்பரத்தினலாயினும் கிட்டுவவன்று.

ஒழுக்கம் என்பது, நாம் நம் பொருட்டும் பிறர்பொருட்டும் நடந்துகொள்ள வேண்டிய படியைக்காண்பிப்பதேயாகும். மதக் கொள்கைகள், நாம் கடவுளுடன் கலந்து வாழவேண்டியபடியைக் காண்பிக்கின்றன. ஒழுக்கமானது, நாம் பொய்பேசப்படாதென்றும், அக்ரமவழியில் புகப்படாதென்றும், ஜீவஹிம்சை செய்யப்படாதென்றும், யாரும் யாவையும் மனம் வருந்தும்படியான செய்கையை நினைக்கவும் கூடாதென்றும், நம்மால் கூடிய அளவு அவர்களுக்கு உதவிசெய்யவேண்டும் என்றுமே குறிக்கின்றது. மதக்கொள்கைகள், ஆன்மா அவசியம் கடவுளைச்சேரவேண்டிய வழிகளைத்தேடிக்கொள்ள வேண்டுமென்றும், கடவுளிடத்தில் எப்போதும் எவ்விஷயத்திலும் பிரியத்துடன் இருக்கவேண்டுமென்றும் கற்பிக்கின்றன. ஒழுக்கத்தினல் உயர்ந்துள்ள ஆன்மாவினையே, மதக்கொள்கைகள், கடவுளின் மார்க்கத்தில் ஏற்றிச் செல்லும். ஆகையினல் மதக்கொள்கைகள் கடவுளுக்கும் ஆன்மாவுக்கு முள்ள சம்பந்தத்தை விருத்திசெய்து கொண்டு போகின்றன.

ஆன்மா உடலில்வசிக்கும்போது கலகம் பெறுவதும் கலக்க முறுவதும், வருந்தியிருப்பதும் வாழ்ந்து இருப்பதும், அஃது இப்பிறப்பில் தேடிக்கொண்ட வழியினுல் அன்று. அதன் முன்வினைக் கிணங்கக்கடவுளால் நியமிக்கப்பட்ட அதனது பிரகிருதியின் காரியங்களேயாகும். இந்த முறைகளை ஆன்மா அநுபவித்தே ஏற வேண்டும். ஏனெனில்:—இவைதாம் கடவுள் நமக்கு அளித்திருக்

கும் பிரவிருத்திமார்க்கச் சட்டங்களாகும். உடலானது பிரவிருத்தி மார்க்கத்துக்கான பிரகிருதியின் அம்சங்களாலும், நிவிருத்தி மார்க்கத்துக்கான கடவுளின் திவ்யாம்சங்களாலுமே உண்டாக்கப் பட்டிருக்கிறது. ஆகையினால் நாம் சேதனாசேதன வஸ்துக்களின் சேர்க்கையுடன் கூடி வாழ்ந்து வருகிறோம். ஆனால், நமது அறிவின் ஏற்றத்தால் அசேதனாம்சங்களைக் கழித்துச் சேதனாம்சங்களைப் பற்றிக்கொண்டே கடவுளின் படியில் ஏறவேண்டும். இதுவே நிவிருத்திமார்க்கம் என்பது. பிரவிருத்தியம்சங்களைத் தள்ளி நிவிருத்தியம்சங்களைப் பற்றுவதற்கு மனிதனே யுரியவன். ஏனெனில்:—இவனே "புல்லாய்ப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப் பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாய்ச், செல்லாநின்ற இத்தாவர சங்கமத்துள், எல்லாப் பிறப்பும் பிறந்" திறந்திறுதியில் பொல்லா வினையும் போக்கிக் கொளவிப் புனிதப்பிறவி எடுத்துளான். இவனே பிரகிருதியினுடைய பரமபுத்திரன். இவனுக்கே ஜீவகாருண்யமென்பது இன்னதென அறிந்துகொள்ளப்படும். இந்த ஜீவகாருண்யமே ஒழுக்கத்துக்கு வித்தும் எருவும் விளைவுமாகும்.

ஆன்மா, ஒருடலைவிட்டு மற்றோருடலைப் பெறும்போது, முந்தின உடலில் தான் பெற்ற அநுபவத்துடனே உழைக்க ஆரம்பிக்கின்றது. ஆயினும் இடையிடையே மிருகாம்சங்களான பல பிரவிருத்திகளுடன் கூடியே இந்த உடலைத்தொடுகின்றது. இந்தப் பிரவிருத்திகளே, ஆனந்தலோகத்தின் படிகளில் ஏறவிடாமல் தடுக்கின்றன. அப்போதுதான், மனிதனுக்கென்று கூடிய கடவுளாது திவ்யாம்சமேலசமாகிய பகுத்தறிவு மந்திரிஸ்தானத்திலிருந்து இவனுக்கு ஆதரவு காட்டுகின்றது.

இந்த அறிவின்வழி நிற்பவரேல், ஆன்மா தனது கர்மத்தில் உயர்ந்து, தனதுயாத்திரையை முடித்து, ஒப்புவபெற நோக்குகிறான். அப்போது பரிசுத்தமான அறிவுடன் விளங்குகிறான். அதுவே கடவுளறிவு. அந்த அறிவுடன், எங்கிருப்பினும் பொதுநோக்கும் அருளுருவமும் பெற்று யாவர்க்கும தெய்வமென விளங்குகின்றான்.

சுகம் துக்கமென்பன, முன் பிறப்பில் ஆன்மா அநுபவித்துப் பழகியுள்ள செயல்களின் பயன்களாகவே முடிகின்றன. ஒவ்வொரு

ஜீவனும், முன் பிறப்பினின்று தன்னுடன் கொண்டுவந்துள்ள அநுபவ முறைகளையே இப்பிறப்பில் மனமொழி மெய்களான் செய்து காட்டுகிறான். இப்பிறப்பில் தனது இயற்கையான பருவத்தினால் நிவிருத்திமார்க்கத்தில் ஏற முயல்வதே இவனுடைய தர்மவிருத்திக்குச் சாட்சியாகும். இந்த ஆன்ம தருமம் பெருகிவந்தால் யாத்திரையும் முடிவுபெறும். பிறகு, மற்றொரு தாய்வயிற்றில் பிறக்க வேண்டியதேயில்லை.

ஆகையினால், எதனையும் ஆன்மவிருத்திக்கு அநுகூலமாகவே செய்துகொள்க. ஆன்மதரும விருத்தியைக்கோரி மனமொழி மெய்களாற் செய்யப்படும் எக்காரியமும் பிறர்க்கு நன்மைசெய்யுமேயன்றி யொருகாலும் தீமையைத்தாராது. இதுவே வேதமார்க்கம். இதுவே புராணக்கருத்து. இதுவே பெரியோரது கொள்கை. இதுவே கடவுளுக்குத் திருப்தி. இதுவே சாந்தியென்பதுமாம். நித்யானந்தவாழ்வு என்பதொன்று உள்ளது உண்மையானால், அஃது இதனைக்காட்டிலும் வேறாகாது. அப்போதுதான் கடவுள் இருக்குமிடமெல்லாம் நாமும் இருப்போம். கடவுள் இல்லாத இடமில்லையாகையால், நாமில்லாத இடமும் இலதாகிவிடும். அப்போது தான் ஒழுக்கத்தின் உயர்வு விழுப்பத்தைப் பெற்றதாகும்.

பத்திராதிபர்.

விவசாயம்.

கொளுஞ்சி விதை சேகரிக்கும் விதமும், அதை விதைக்குமுன் செய்யவேண்டிய பக்குவமும்.

விவசாய டிபார்ட்டுமெண்டார் கிருஷிகருக்கு சிபார்சு செய்யும் அநேக பசுந்தாள் உரப்பயிர்களில் கொளிஞ்சிப்பயிர் ஒன்று. "கொளிஞ்சி நெல்காட்டும்" அல்லது "கொளிஞ்சி முக்காட்டும்" என்று வழங்கும் பழமொழி தமிழ் ஜில்லாவிலுள்ள எல்லா கிருஷிகருக்கும் சாதாரணமாய்த் தெரிந்தவிஷயம். தற்காலம் சாதாரண

மாய் கிருஷிகர் எருவுக்காக வாங்கும் இலைதழைகளின் விலை ஜாஸ்தி யாகிக்கொண்டிருப்பதுமல்லாமல் தழை எருக்கள் தங்களுக்கு வேண்டும்போது சுலபமாய் கிடைக்கக்கூடாமலிருக்கிறது. ஆகையால் விவசாய இலாகா உத்தியோகஸ்தர்கள் பசுந்தாள் எருப்பயிர்களை கிருஷிகர் தங்களுடைய நிலங்களிலேயே விளைவித்து பலனடைதல் மெத்த சரியான விஷயமென்று போதிக்கிறார்கள். டிபார்ட்மெண்டார் சிபார்சு செய்யும் அநேகவித பசுந்தாள் உரப்பயிர்களில வடிகால் வசதியுள்ள ஒருபோக நஞ்சை நிலங்களுக்கு கொளிஞ்சிப்பயிர்தான் மிகத்திறமானது. இக்கொளிஞ்சி மிகச் சிறந்ததென்ற விஷயத்தை உத்தேசித்து திருநெல்வேலி ஜில்லாவைத்தவிர மற்ற தமிழ் ஜில்லாக்களில் இக்கொளிஞ்சி விதைக்கு மெத்த கிராக்கி ஏற்பட்டுவிட்டது. இது காரணத்தினால் திருநெல்வேலி ஜில்லாவிலிருந்து இதர ஜில்லாக்களுக்கு வருஷாவருஷம் ஏராளமான கொளிஞ்சிவிதை ஏற்றுமதியாகிறது. திருநெல்வேலி ஜில்லாவிலுள்ளவர்களைப்போல் இதர ஜில்லாவிலுள்ள கிருஷிகரும் இக்கொளிஞ்சிவிதை சேகரிக்காததினால் நாளுக்குநாள் திருநெல்வேலிஜில்லாவில இவ்விதைக்கு பிரியம் ஜாஸ்தி உண்டாகிக் கொண்டிருக்கிறது. இதர ஜில்லாக்களிலுள்ள கிருஷிகருக்கும் இவ்விதை சேகரிக்கும் விதம் தெரிந்துவிட்டால் யாதொரு கஷ்டமில்லாமல் கொளிஞ்சிவிதை அங்கங்கே கிடைக்கும். திருநெல்வேலி ஜில்லாவிலிருந்து வருஷாவருஷம் தருவித்துக்கொள்ளவேண்டிய அவசியமும் நேரிடாது. கொளிஞ்சிவிதை சேகரிக்கும் முறையில் யாதொரு கஷ்டமுமில்லை. அதை எளிதில் எல்லாரும் சுலபமாய் கையாடக்கூடியதுதான். கொளிஞ்சிச்செடிகளில் சாதாரணமாய் மார்ச் ஏப்ரல் மாதங்களில் புஷ்பம் பிடித்து ஜூன் ஜூலை மாதங்களுக்குள் காய்பிடித்து விதை முற்றியிருக்கும். முற்றின நெற்றிலிருந்து சூரிய உஷ்ணத்தினால் நெற்று வெடித்து விதைகள் செடிகளுக்கு அடியிலும் பக்கத்திலும் கொட்டிவிடும். இவ்விதம் கொட்டுண்டிருக்கும் விதைகளை திருநெல்வேலி கிருஷிகர் மண்ணுடன் கூட்டிப்பெருக்கி அப்பால் மண்ணைச் சல்லடைகளால் அப்புறப்படுத்தித் தனி விதைகளை மாத்திரம் வேறே எடுத்துக் கட்டிவைப்ப

துண்டு. இந்த விதை சேகரிக்கும் மாதங்களில் சாதாரணமாய் கூலிச்சிற்றாள்களுக்கும் வேலைஜாஸ்தியகப்படாததாகையால், அவர்கள் இவ்விதை சேகரிப்பதில் சிரத்தை எடுத்துச் சேகரிப்பது சாதாரணம். அப்படிச் சேகரித்த ஒருபடி விதைக்கு பதிலாக ஒருபடி நெல்லை கூலியாக வாங்கும் வழக்கமுமுண்டு. மேலே சொன்னமாதிரி விதை சேகரிக்க எல்லாவிடங்களிலும் சௌகரியப்படமாட்டாது. ஏனென்றால் செடிகளின் கீழிருக்கும் மண் இளகலாயும் மணலவாட்டாயும் இருக்கும்பட்சத்தில் விதைகளைக் கூட்டிப்பெருக்கி எடுக்கக் கஷ்டப்படும். இவ்விதையை மேல்குறித்தமாதிரியன்றி வேறுவிதத்திலும் சேகரிக்கலாம். கொளிஞ்சி செடிகளில் காய்பிடித்துக் காய்முற்றி வெடிக்கும் பருவத்திற்குச் சில நாட்களுக்குமுன் அக்காய்களையும் நெற்றுகளையும், சாதாரணமாய் மொச்சைக்காய், காராமணிக்காய்களை முற்றியிருக்கும் சமயத்தில் பொருக்கி எடுப்பதுபோல், இக்கொளிஞ்சிக்காய்களையும் உருவிச் சேகரிக்கலாம். சாதாரணமாய் ஒரு கூலிப்பெண் 16படி நெற்றுக்களை ஒருநாளில் உருவிச் சேகரிக்கக் கூடும். அதிலிருந்து குறைந்தது ஒருபடி விதை அகப்படக் கூடும். இப்படி முற்றின காய்களையும் நெற்றுகளையும் பொருக்கி அதை இரண்டுநாள் காயப்போட்டுவிட்டால் வெயிலில் மேலதோல் வெடித்து விதைகள் கீழேகொட்டுண்டுபோம். ஆகையால் மேற்குறித்த இரண்டு விதங்களில் எந்தவிதம் சௌகரியமாய் காணப்படுகிறதோ அந்தவிதம் கையாடிக் கொளிஞ்சிவிதையை, சேகரிக்கும் வழக்கத்தை மற்றஜில்லாக்களிலும் அனுஷ்டித்துவிட்டால் திருநெல்வேலி ஜில்லாவைப்போல தூரமான ஜில்லாக்களிலிருந்து விதை வருஷாவருஷம் தருவிக்கவேண்டிய அவசியம் நேரிடமாட்டாது. விதையும் அங்கங்கே புதிதாயும் சேகரித்துக் கொள்ளலாமென்ற நிச்சயமுமிருக்கும்.

கொளிஞ்சி விதைகளை வாங்கும் கிருஷிகர்கள் தாங்கள் வாங்கினவிதை சரியானபடி முளைக்கவில்லையென்றும் தங்களுக்கு அனுப்பியவிதைகள் நல்லதல்லவென்றும் சிலவேளைகளில் முறையிடுகிறார்கள். விதைகள் முளையாமலிருப்பது அனேகமாய் விதை பழுதினால் மாத்திரமல்ல. விதைகளை விதைக்குமுன் பக்குவப்படுத்தி

விதை தாமதித்த இதற்கு முக்கியகாரணம். கொளிஞ்சி விதையின் மேல்தோல் புரையானது மிகவும் கெட்டியாயிருக்கும் சுபாவமுடையதாதலால் அக்கெட்டித்தோல் மெதுவடைந்து அந்தவிதையிலுள்ள முளை வெளிவர மெத்த நாளாகிறது. ஆகையால் விதை ஜலதி முளைக்கவேண்டுமானால் கெட்டியாயிருக்கும் மேல்தோலை மெதுவடையச்செய்யும் பக்குவங்களைக் கையாடவேண்டியது அவசியம். இப்பக்குவங்கள் விதைவிதைக்கு முன்னமே விதைகளுக்குச் செய்யவேண்டும். கொளிஞ்சி விதை சீக்கிரமாய் முளைக்கும்பொருட்டு அனேகவிதங்களில் விதையை பக்குவப்படுத்தும் வழக்கங்களிருக்கின்றன. அவைகளில் சாதாரணமாய் கையாடக்கூடியதும் சுலபமானதும் சில இதனடியில் குறிக்கப்பட்டிருக்கின்றன:—

(1) விதைகளைக் கொளிஞ்சி செடிகளின் கீழிருந்து மண்ணுடன் கூட்டிப்பெருக்கி வந்தவுடன் விதையுடன்கலந்த மணலை முதலில் போக்காமல் அத்துடன் கொஞ்சம் செம்மண்கலந்து அதை கல்லுரலிலாவது, மர உரலிலாவது நெல் குற்றுவதுபோல் உலக்கைகள் கொண்டு லேசாய் சற்றுநேரம் குற்றி, விதையின் மேல் தோல் சற்று உராஞ்சியிருப்பதுபோல் காணும்வரை குற்றி எடுத்து அதிலுள்ள மண், கருப்புவிதைகள், பொக்கு விதைகள் முதலானவைகளை செவ்வையாய் போக்கி விதையைக் காயப்போட்டு பத்திரப்படுத்திவிதைக்கவேண்டும்.

(2) செடிகளின் அடியில் தரை கெட்டியாயிருக்குமிடங்களிலிருந்து சேகரித்த கொளிஞ்சி விதையை கொஞ்சம் நெல்பதருடன் சமபாகம் கலந்து முன்சொன்ன முறைப்படி குற்றி எடுத்துப்பதரை தூற்றிவிட்டு நல்ல விதைகளை அப்புறப்படுத்தி வெயிலில் காயப்போட்டு வைத்திருந்து விதைக்கவேண்டும்.

(3) வரகு தானியத்திலிருக்கும் உமியை அப்புறப்படுத்த உபயோகிக்கும் திருகையில் இந்த கொளிஞ்சி விதையையும் போட்டு வரகு அரிசி எப்படித் தயார் செய்கிறார்களோ, அதேபிரகாரம் லேசாய் திருகையை சுற்றி விதையின் தோல் உராஞ்சின சமயத்தில் அவ்விதைகளை அப்புறப்படுத்தி சுத்தப்படுத்தி பத்திரப்படுத்தி வைத்துக்கொண்டு விதைக்கவேண்டும்.

(4) விதைகளை ஏராளமாய்த் தயார் செய்யவேண்டிய காலங்களில், விதைகளைப் பருமணலுடன் கலந்து ஒரு கெட்டியான களத்தில் விதையை லேசாய்ப் பரப்பி அதன்மேல் சற்று வைக்கோலைப் பரப்பி அதன் பேரில் மாடுகள் கொண்டு நெல்லுக்குத் தாம்பு கட்டி அடிப்பதுபோல் சற்று நேரம் தாம்பு அடித்தால் விதைகளின் மேல் தோல் சற்று உராஞ்சிப்போகும். அதை எடுத்து ஒப்படிசெய்து பந்தோபஸ்து செய்து விதைக்கவேண்டும்.

இப்படி மேற்குறித்த எந்த விதத்திலாவதும் ஒரு விதத்தில் விதைகளைப் பக்குவப்படுத்தி விதைத்தால் விதைகள் நன்றாய் முளைக்குமென்பதில் தடையில்லை. எந்த விதத்தில் விதைகளை பக்குவப்படுத்தும்போதும் விதைகள் நசுங்கிப்போகாமலும் விதைகளின் மேலிருக்கும் கெட்டித்தோல்மாத்திரம் சற்று உராஞ்சிப் போகும்படிக்கும் செய்யவேண்டியது தவிர விதைகள் நசுங்கிப் போகும்படி செய்யக்கூடாது. மேற்சொன்னபிரகாரம் செய்வதின் கருத்து விதைகளின் மேலிருக்கும் கெட்டியான மேல்தோல் சற்று மெதுவடைவதற்குத்தானே தவிர வேறொன்றிற்குமல்ல.

J, செல்வரெங்க ராஜு.
விவசாய உதவி டைரக்டர்.
செண்ட்ரல் டிவிஷன்.

பத்திரிகைபாராய்ச்சி.

---

(1) ஒப்பந்தக்கூலிமுறையை ஒழித்துவிடச் சென்னையில் பொதுக்கூட்டம்.

தீர்மானம்.

இத்தேசத்திலிருந்து ஒப்பந்தத்தின்மேல் கூலிவேலை செய்யப்போகிறவர்களின் சன்மார்க்கத்துக்குப் பாதகமாயிருப்பதும், இத்தேசத்துக்கே அவமானத்தைக்கொடுக்கப்படுகிறதாகக் கருதப்படுகிறதுமான ஒப்பந்தமுறை இன்னும் அநுஷ்டானத்திலிருந்து வருகிறதை உத்தேசித்து, இத்தேசத்து ஜனங்கள் எல்லோரும் பீதியடைகிறார்கள் என்பதை இந்த மீட்டிங்கில் கூடியுள்ள

சென்னைவாசிகள் இந்தியா கவர்ன்மெண்டுக்கும் இந்தியா மந்திரிக்கும் மரியாதையுடன் தெரிவித்துக் கொள்கிறதாகவும், லண்டனில் இவ்விஷயமாய்க் கூடப் போகிற கான்பரென்ஸ் மே-மாதம் 31-தேதிக்குள் கூடித்தங்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிவித்துக் கொண்டாலும் தெரிவித்துக் கொள்ளா விடினும் அந்தத்தேதிக்கு அப்புறம் இந்தமுறை அனுஷ்டானத்தில் இருக்கக் கூடாதென்று கேட்டுக்கொள்ளுகிறதாகவும்,

2. லண்டனில் இவ்விஷயமாய் நடக்கப்போகிற கான்பரென்ஸின் மெம்பர்களில், இந்தியப்பொது ஜன அபிப்பிராயத்தைத் தெரிவிக்கும் சபைகளால் தெரிந்தெடுக்கப்பட்ட இந்தியர்கள் போதுமான வரையில் இருக்கும்படி செய்யவேண்டுமென்றும்,

3. அந்தக்கான்பரன்ஸ் சிபார்சு செய்யும் ஏற்பாட்டைப் பரிசீலனை செய்து, இந்தியப் பொதுச்சபைகள் தங்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிவிக்குமுன், இந்தியாகவர்ன்மெண்டார் அந்த ஏற்பாட்டை அங்கீகரிக்கக்கூடா தென்றும்,

4. அடுத்தமேமாதம் 31 தேதிவரையில் ஒப்பந்தக்கூலிகள் சேர்க்கப்படு வார்களாகில், ஒழுங்காக விவாகமானவர்களாயிருந்தாலொழியத் தனி ஆண் தனிப்பெண்களாயிருக்கக் கூடாதென்றும், அவர்கள் செய்துகொடுக்கும் ஒப் பந்தத்தின் ஷரத்துகள் என்னவென்று அவைகளை சுயபாஷையிலேயே தெரி விக்கப்படவேண்டுமென்றும் இந்த மீட்டிங் கேட்டுக்கொள்ளுகிறது.

ஸ்ரீமான் காந்தியின் உபந்நியாசம்.

ஒப்பந்தக்கூலி முறையைத் தடுப்பதைப்பற்றி ஆட்சேபணைகள் செய்துத் தீர்மானம் செய்யக் காசிச்சியில் கால் கந்தா ஹாலில் ஒரு பொதுக்கூட்டம் கூடிற்று. இரண்டாயிரம் இந்தியர்களுக்கு மேல் அச்சபையில் வந்திருந்தார்கள். ஸ்ரீமான் காந்தி அக்கூட்டத்தில் பிரசன்னமாயிருந்து சபையில் உபந்யாசம் செய்தார். கனம் ஹரிச்சந்திர விஷ்ணு தாகும் ஒரு பிரசங்கம் செய்தார். பின் ஒப்பந்தக்கூலி முறையை ஒழிக்கவேண்டுமென்று தீர்மானங்கள் செய்யப்பட்டன.

---

(2) காகிதப்பஞ்சமும் செட்டும்.

காகிதப்பஞ்சத்திலிருந்து சமாளித்து வெளிக்கிளம்புவதற்காக இங்கிலாந்திலே முயற்சி செய்யப்படுவதை இங்கே அவசியம் குறிப்பிடவேண்டும்.

தெருக்களிலே ஒட்டப்படும் பெரிய விளம்பரங்களின் அளவு இவ்வளவுதான் இருக்கவேண்டுமென்பதாகவும், சாமான்களின் விற்பனையைப்பற்றிய விளம்பரங்கள் பிரசுரிக்கப்படக் கூடாவென்பதாகவும், இங்கிலாந்திலே வியாபார இலாகா அதிகாரிகள் உத்தரவு செய்திருக்கிறார்கள். இங்கிலாந்திலே பல பத்திரிகைகள் தங்களது விலையை ஏற்றிவிட்டனவென்பது நேயர்களுக்குத் தெரியும். சிலமாதாந்த சஞ்சிகைகளோ தங்களது விலையை 7 அணாவாக உயர்த்திவிட்டனவென்று அறிகிறோம். இது இப்படியிருக்க, லண்டன் நகரிலே ஜெனரல் போஸ்டாபீஸ் ஓர் இலாகாவிலிருந்து மற்றோர் இலாக்காவுக்குக் கடிதம் எழுதியனுப்பும்போது அக்கடிதத்துக்குப் போடப்படும் கவர் (மேல் உறை) சுத்தமாய் உபயோகமற்றுப்போகும் வரையில் திரும்பத்திரும்ப உபயோகிக்கப்படவேண்டுமென்று உத்தரவாகி, அவ்விதமே அநுஷ்டானத்திலிருப்பதாகத் தெரியவருகிறது. இவ்விதம் காகிதத்துக்குப் பஞ்சம் ஏற்பட்டிருப்பதையும், காகிதத்தில் செட்டுக்காட்டப்படுவதையும் அனைவரும் கவனிப்பார்களென நம்புகிறோம்

சுதேசமித்திரன்.

வைத்தியக் குறிப்புகள்.

ஆமணக்கெண்ணெயின் வாசனையை மறைக்கும் வகை.

ஆமணக்கெண்ணெய்க்குள்ள துர்வாசனை பலருக்கும் மனவெறுப்பை யுண்டுபண்ணுகிறது. இவ்வாசனையை அடக்குவதற்குத்தகுந்த உபாயத்தை தி நர்ஸ் (The Nurse) என்னும் பத்திரிகை இங்ஙனம் கூறுகின்றது.

"ஒரு டோஸ் ஆமணக்கெண்ணெயில் அதற்குச் சமமான அளவில் பாலைக் கலந்து வாசனைக்காக மிளகுப்பொடியும் உப்பும் சேர்த்து உட்கொண்டால் துர்வாசனையே தெரியாது. எண்ணெயில் பாலைச் சூடாகச்சேர்க்கவேண்டும். ஆமணக்கெண்ணெயை வெறுப்பவர் இவ்வாறு செய்தால், அவர்கள் எண்ணெயைப் பருகுவதாகவே உணரமாட்டார். எலுமிச்சம்பழச்சாற்றை இவ்வெண்ணெயில்சேர்த்து உட்கொண்டால் நல்லவாசனையாகவும்ருசியாகவும் இருக்கும்."

கற்பூரத் தைலம்

தலையிலும் வஸ்திரத்திலும் உண்டாகிற பேன்களை அழிப்பதற்கு இப்போது நாகரிக வைத்தியர்கள் கற்பூரத்தைலத்தைத் தாராளமாய் உபயோகிக்கின்றனர். பேன்களைமாத்திரமல்ல; ஈறுகளையும் சிறிய முட்டைகளாக ஆகக்கூடிய நுண்ணிய ஜீவாணுக்களையும் அழிப்பதற்கு இத்தைலம் மிகவும் சிறந்தது. இதனை உபயோகித்தால் எவ்விதகெடுதியும் (சர்மத்திற்காவது மயிர்களுக்காவது) உண்டாவதில்லை. பேன்களும் ஈறுகளும் சுலபமாகச் சரீரத்திற்குக் கெடுதியை உண்டுபண்ணுவதுடன், சில வியாதிக்குக்காரணமான நுண்ணுயிர்களையும் ஒருவரிடமிருந்து மற்றவரிடத்திற்குத் தொற்றவைப்பதால், அப்பூச்சிகளை ஒழிப்பதற்கு இத்தைலத்தை நமது வைத்தியர்களும் உபயோகித்துப்பார்த்து, அதன் பலனை வைத்திய கலாநிதிக்கு எழுதியனுப்புவார்களாக.

—

சாமந்தித்தைலம்

சீமைச்சாமந்தியிலிருந்து இறக்கப்படும் தைலம் இங்கிலீஷ் மருந்துக்கடைகளில் கிடைக்கும். ஆயில் ஆப் சாமோமைல (Oil of chamomile) என்று ஆங்கிலத்தில் பெயர். இத்தைலத்தை வெகு நாட்களாகத் தொந்தரவளித்துவரும் கக்கிருமலில் மார்பின்மேல் தடவி வருவது நலம்:—Practical medicine.

—

நாட்டு அக்ரோட்.

ஸம்ஸ்கிருதத்தில் ஆக்ஷோடகம் என்று கூறப்படும் இவ்வழகிய மரம் தென்னிந்தியாவில் அநேகம் பிரதேசங்களில் காணக்கூடியது. இது கோடைக் காலத்தில் செழித்துப் புஷ்பிக்கும்.

இதன் வித்திலிருந்து ஒருவித எண்ணெய் எடுக்கலாம். இந்த எண்ணெயை அரைப்பலம் எடை உட்கொண்டால் நன்கு விரேசகமாகும்; தருகுடவாயிருந்தால் இரண்டு பலம் வரையில உட்கொள்ளலாம். வயிற்றில் சங்கடமுண்டாகாமல் வெகு ஸுலபமாகப் பேதியாகும். இவ்வித குணத்தினால் ஆமணக்கெண்ணெயைக் காட்டிலும் இது விசேஷித்ததென்று நம்பலாம். அர்ச்சஸ் என்னும் மூல ரோகத்தினாலும், வேறு காரணங்களாலுண்டாகும் மலபந்தத்தினாலும் கஷ்டப்படுபவர் அக்ரோட் வித்தின் எண்ணெயை அவசியமான ஸமயங்களில் உபயோகித்து வருவது நலம்.

வைத்திய கலாநிதி.

கடிதங்கள்.

சபை நிகழ்ச்சிக் குறிப்புகள்.

புதுவயல் ஞானப்பிரகாச ஸபை.

ஸ்ரீ பரமேசுவரனது திருவருளால், சிறுநடைபெற்றுவரும் இச்ச ஸபையின் 2-வது ஆண்டு 8-வது மாதாந்தக் கூட்ட தினமாகிய நாளிது வருஷம் தைமீ 30உ ஆதிவாரத்தன்று, ஷை புதுவயல் நகரத்துக் கடுத்த ஸ்ரீ வீரவன க்ஷேத்திர மென்னும் சாக்கோட்டைப் பதியிலுள்ள ஸ்ரீ உமாம்பிகாஸமேத ஸ்ரீ வீரவனேசுவரரது திருவாலய அஷ்டபந்தன மகாகும்பாபிஷேக மஹோத்சவமாதலின், ஞா. பி. ஸபைக் கூட்டமானது ஷை சாக்கோட்டையில் நூதனமாக அமைக்கப் பெற்ற தண்ணீர்ப் பந்தரில் மாலை 2½ மணிக்கு குன்றக்குடி பிர்மஸ்ரீ விசுவநாத சாஸ்திரிகளவர்களின் அக்கிராஸனத்தின் கீழ் கூடிற்று. முதலில் பிர்மஸ்ரீ தலைவரவர்கள் முகவுரை மொழிந்தவுடன் (1) அறிவு (2) ப்ராசீனமும் நவீனமும் (3) ஒற்றுமை (4) சிவோபாஸனை (5) பிறப்பினருமை (6) சம்பிராயணம் (உலகம் யாவையும் என்னும் முதற் செய்யுளாராய்ச்சி) என்னும் இவ்வுபவிஷயங்கள் முறையே, (1) (பலவான்குடி) ஸ்ரீமாந் ராம. கு. இராமஸாமி செட்டியாரவர்கள் (2) (போசம்பட்டி) பிர்மஸ்ரீ மீனாட்சிசுந்தரஐயரவர்கள் (3) (முறையூர்) ஸ்ரீமாந் சுப. குமரப்ப செட்டியாரவர்கள் (4) (கொத்தமங்கலம்) பௌராணிகர். ஸ்ரீமாந். சிவ. அருணகிரி முதலியாரவர்கள் (5) (கண்டனூர்) ஸ்ரீமாந். தெ. அரு. சித. இராமநாதன் செட்டியாரவர்கள். (6) (காரைக்குடி) பிர்மஸ்ரீ M. V. கோவிந்தராஜ ஐயங்காரவர்கள் என்னும் இவ்வறிவாளர்களால் தெளிவாக உபந்யசிக்கப் பெற்றன. இவ்வுபந்யாஸ நிகழ்ச்சிக் காலத்தில் ஸ்ரீமாந் சிவகங்கை ஜமீந்தாரவர்கள் விஜயஞ்செய்து கும்பாபிஷேக வைபவத்தைப் பற்றியும் புதுவயல் நகரத்தார்களைப் பற்றியும், ஞானப்பிரகாச ஸபையைப்பற்றியும் சிறப்பித்துப் பேசினார்கள். பிரதி உபந்யாஸ முடிவிலும் பிர்மஸ்ரீ தலைவரவர்கள் தமது அரிய அபிப்பிராயங்களை விளக்கமாகக் கூறினார்கள். பின்னர், அனைவர்க்கும் வந்தனோபசாரங்கூறி ஹாரசந்தன தாம்பூலாதிகள் வழங்கப் பெற்று மங்கள காரியோபகத்துடனே மாலை 9 மணிக்கு ஸபை நன்கு நிறைவேறியது. சுபம்! சுபம்!! சுபம்!!!

போதுநலம் நாடுவோன்.

கோதகர்ஞானசம்பந்தநற்சபை.

இதன் மாதாந்தரக் கூட்டம் மாசிமீ ௰௩உ (25—2—17) ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 4½ மணிக்குக் கூடிற்று. கடவுள் வாழ்த்துக் கூறியவுடன் உடுப்பி பரமஹம்ஸ ஸ்ரீ பாலசுப்பிரமணியஸ்வாமிகள் அக்கிராஸனத்தமர்ந்திருக்க, க. வி. கலாசாலை உதவித் தமிழாசிரியர் ஸ்ரீ S. ஆழ்வாரையங்காரவர்கள் "கற்பு" என்பதனையும், சொக்கலிங்கம்புதூர் ம. வா. வித்தியாசாலைத் தமிழாசிரியர் ஸ்ரீ செ. இராமமூர்த்தி ஐயரவர்கள் "உள்ளத்தாற் பொய்யாதொழுகல்" என்பதனையும், ஸ்ரீமான். அ. நா. சுப்பிரமணியன் செட்டியாரவர்கள் "விநாயகப்பிரபாவம்" என்பதனையும் அழகாக உபந்யசித்தார்கள். பின்பு சுவாமிகள் மேற்படி விஷயங்களுக்கெல்லாம் அபிப்ராயங்கூறியதுடன் சபையையும் கலாசாலையையும் நன்கு வாழ்த்தினார்கள். இரவு 7½ மணிக்குச் சபை பூர்த்தியாயிற்று.

இராயபுரம்

சாரதாவிலாஸ சபை.

சிவபிரான் திருவருளால் இங்ஙனமைப்பெற்று வருகிறதான இச்சபையின் இரண்டாம் வருடத்து ஐந்தாமாதத்துக் கூட்டம் இம்மதி ௰௪உ (26-2-17) சோமவாரத்தன்று பிற்பகல் 3½ மணிக்குக் கூடிற்று. முறையே கடவுள் வாழ்த்துக்கூறப்பெற்று ப்ரம்மஸ்ரீ சமஸ்கிருத பண்டிதர் S. மீனாட்சி சுந்தரதீக்ஷிதர் அவர்கள் சபையார் வேண்டுகோட்படி அக்கிராசனத்தமர்ந்து முகவுரைகூறியபின்னர் ஸ்ரீ சேஷையர், ஸ்ரீ சித வெப்பசெட்டியார், ஸ்ரீ வேலுமயிலுஞ் சுவாமியவர்கள், மிரால ஸ்ரீ V. K. முதலையபிள்ளையவர்கள்; பக்தி கல்வி முயற்சி ஆரோக்கியம் தேசசுகம் என்ற விஷயங்களைப் பற்றி ஒவ்வொருவரும் நீண்டநேரம் தத்தம் ஆராய்ச்சியைக் கொண்டு யாவருமுவக்குமாறு பிரசங்கித்தார்கள்.

அதன்பின்னர் இவ்வூர் ஸ்ரீ பாலகவி K. நல்லைய ஆசாரியவர்கள் மேற்கூறப்பட்ட ஐந்து விஷயங்களின் சுருக்கம் என்பதைப் பற்றி எடுத்துக்கொண்டு பக்தியென்னும் இது உலகின் கணுள்ள மக்கள் பலரும் மோட்சத்தை யடைதற்கு முதன்மை பெற்றதாயினும், அதனைப்பகுத்துணர்தற்குக் கல்வியே அவசியமென்றும், அக்கல்வியைக் கற்றுக்கொள்வதற்கு முயற்சியே பிரதானமும் பயன்றரத்தக்க தென்றும், அத்துணைப் பெரிதான முயற்சிக்கும் மனமானது

சந்தோஷமடைந்தா லன்றிச்சிறிதும் பயனடையா தென்றும், இத்தகைய விஷயங்கட்கெல்லாம்சரீரங்காரணமாகல் பற்றி சரீரத்தைப்போல் முக்கிய மென்றுங்கூறி, சரீரமல்லாது சந்தோஷத்தோடு முயற்சிசெய்து கல்வியைக் கற்று பக்தி செய்தற்கியலாதாகலான, இதற்குக் காரணம் சரீரமென்றும் பற் பல நூற்பிரமாணங்களாலும் தக்க உபமான உபமேயத்தாலுங்கூறி முடித்தார். பிறகு சபாநாயகரவர்களும் ஒவ்வொரு விஷயங்கட்கும் தக்கமேற்கோள்களை யெடுத்துக் கூற சபையும் 8½ மணிக்குத் தேவாரதிருப்பாக்களோதப் பெற்று வந்தனோபசாரத்துடன் ஹாரசந்தனதாம்பூலாதிகள் வழங்கப் பெற்று மங்கள கரகோஷத்துடனிறுதிவெய்தியது. சுபம்! சுபம்!! சுபம்!!!

ஆஸ்பிடல்.

இவ்வூரில் சிலவருடங்களாகத் தஞ்சாவூர் ஸ்ரீமாந் டாக்டர் கிருஷ்ண ஸ்வாமித்தேவ்கோவிண்டார் அவர்கள் ஔஷதாலய மொன்று ஏற்படுத்தி இந்நகரவாசிகட்கும், அயலகிராமங்களிலுள்ள ஜனங்கட்கும் வியாதியின் குணங் கண்டு அவ்வியாதிகளின் மிகுதிக்குத் தக்கவாறு ஔஷதங்களைக் கொடுத்துச் சுகமடைவித்து வருகிறார்கள். அவர்களோ உயர்ந்த படிப்பும், ஆராய்ச்சியும் நன்னடக்கையும் நற்குணங்களும் பரோபகாரச் சிந்தையும் ஜனங்களிடத்து அன்பும் வாய்ந்துள்ளவர்கள். அவர்களை இந்நகர வைசியர்களாகிய ஸ்ரீமாங்கள் பலரும் அவர்கள் சொந்தமா யிருந்ததை விடுத்து லோகோபகாரமாக சர்வஜனங் களின் நன்மையையும் கருதி இவ்வூரில் பொதுவாக நடத்துவிக்கிறதாகவும் தெரியவருகிறது. அவ்வண்ணமே சிவபிரான்றிருவருள் புரிவாராக.

26—2—17
இராயபுரம்.

தன்மை விரும்பி.
B. V. K. N.

பலவான்குடி.

மணிவாசக சங்கம்.

நள௵ மாசி௴ ௨௪ (8. 3. 17) திருவருட்பேற்றால் நம் மணிவாசகசங்கத் தின் மாதக்கூட்டங்கூடிற்று. காரைக்குடி கம்பராமாயணப்பிரசாரகரும், வித்தி யாபாநு பத்திராதிபருமாகிய பிரம்மஸ்ரீ M. V. கோவிந்தராஜய்யங்கார் அவர்கள் அக்கிராசனம்வகிக்க, திருவாசகமடம் ஸ்ரீமத் சிதம்பரசாமிகள் 'ஸ்ரீ மாணிக்க வாசக சுவாமிகள்' சரித்திரத்தையும், கோநகர்கற்பகவிநாயகசாலாசாலைத்தலைமை யாசிரியர் பிரம்மஸ்ரீ. பண்டித, அ. கோபாலையரவர்கள் 'போதனை' என்ற விஷ

யத்தையும் நன்கு யுபந்நியசித்தார்கள். முடிவில் சபாநாயகர் அழகிய முடிவுரை கூறியபின்னர். சித்திவிநாயக வித்தியாசாலை மாணவி. கு. மீனாக்ஷி வாழ்த்துப் பாக்கூறியது மிகவும் வியக்கத்தக்கது. ஆரசந்தனாதிகள் வழங்கச்சபை இனிது நடைபெற்றது. சுபம். ஷண்முகநாதன்

உள்ளூர் வர்த்தமானம்.

காலநிலை:—செங்கதிரோன் வெம்மையதிகம். மழைபெய்து அதிக நாளாயிற்று. கால்நடைகள் அருந்தக் கண்மாய் குளம் குட்டைகளில நீரில்லை. குடிநீர் கொஞ்சம் ஊருணியிலுண்டு. பெரும்பான்மையான கிணறுகளிலும் நீரில்லை. சிற்சில கிணறுகளிலிருந்து ஊறஊற இறைத்துக் கொள்ளுகிறார்கள். ஆகவே இப்போது இங்குள்ள நிலை,

"தாழிநறுங் குவளையந்தார்த் தருமன்மகனருட்புனலுந் தாங்க வேலை
யூழிதொறும் பெரும்புனலு முடலிலுறு வெயர்ப்புனலு மூறி யூறிப்
பாழிதொறு மிறைக்கின்ற பைம்புனலு மல்லதுவெம் பருவந் தன்னாற்
பூழிபடு கமர்வாய நானிலத்துப் புகலுதற்கோர் புனலு முண்டோ."

(பாரதம் ஆதி—காண்டவ-செ19)

என்னுஞ்செய்யுளை ஞாபகமூட்டுகிறது. வருணபகவான் கருணையை ஜனங்கள் எதிர்பார்த்த வண்ணமாயிருக்கிறார்கள்

அகவிலை:—சம்பா நெல் பொதி 1-க்கு ரூபா 15, 15—8—0 கேழ்வரகு ரூபா. 1-க்கு பட்டணம்படி 4.

போஸ்டாபீஸ்:—இவ்வூர்ப் போஸ்டாபீஸ், அதற்கு மேல்புறம் அதற்கென்று புதிதாகக் கட்டப் பெற்றுள்ள அழகிய புதுக்கட்டிடத்திற்கு 1-௨-17 மாற்றப் பெற்றது.

கஞ்சித்தொட்டி:—முன் சில கனவான்கள் ஏற்பாடு செய்திருந்த கஞ்சித்தொட்டிக்கு இப்பொழுது திருமயம் ரஸ்தா ஓரத்தில் செல்லச்சாமி மடத்துக்கு வடபுறம் உள்ள ஸ்தலத்தில் கட்டிடங் தொடங்கப் பெற்று வேலை நடந்து வருகிறது. இக்கட்டிடம் கூடிய சீக்கிரம் வேலையாகி இப்பஞ்சகாலத்தில் கஞ்சித்தாமம் சிறப்புற்று விளங்கும்படி எல்லாம்வல்ல இறைவன் கிருபை செய்வாராக.

சம்பந்தன்.